இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 53 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 14 – ஞாயிற்றுக்கிழமை 01 அக்டோபர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 53: Thiruvalluvar Year - 2054 - Purattasi 14 - Sunday 01 October 2023 - Chennai 12 Pages ₹ 5.00

### பா.ஜ.க.வின் கடந்த காலத் தவறுகளை நினைவூட்டி பிரச்சாரம் செய்யுங்கள்! நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!

# இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம்!

## கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ‘எக்ஸ்’ வலைதளத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, அக்.1-**

**கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் எக்ஸ் (ட்விட்டர்) சமூக வலைத் தளத்தில் திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தின் இறுதி நாளான நேற்று (30-09-2023) ஒருங்கிணைக்கப்பட்ட ஸ்பேசஸ்-இல் சிறப்புரையாற்றினார்.**

**உணர்ச்சியும் எழுச்சியும் மிக்கதாய் அமைந்திருந்த அவ்வுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பா.ஜ.க.வின் கடந்த கலத் தவறுகளை சமூக வலைதளங்களில் திரும்பத் திரும்ப நினைவூட்டும் பிரச்சாரம் செய்யுங்கள். இதைச் சரியாக செய்தாலே, நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!” என்றும், “கலைஞரின் உடன்பிறப்புகளாக, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து, இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம்” என்றும் குறிப்பிட்டார்.**

எக்ஸ் (ட்விட்டர்) சமூக வலை தளத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

எல்லோருக்கும் வணக்கம்! நலமாக இருக்கிறீர்களா…

‘திராவிட மாதம்’ என்று சொல்லப்படும் செப்டம்பர் மாதத்தில், தினமும் ஒரு தலைப்பில், இயக்க முன்னோடிகள் கலந்து கொண்டு திராவிட இயக்க் கருத்துகளைப் பேசி இருக்கிறார்கள். நிறைவு நாளான இன்றைக்கு, என்னைப் பேச அழைத்திருக்கிறீர்கள்… மிகவும் மகிழ்ச்சி!




**தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் தம்பி டி.ஆர்.பி.ராஜாவுக்கு நன்றி!**

இந்த ‘ஸ்பேசஸ்’ கருத்தரங்கை ஆர்கனைஸ் செய்திருக்கும் ஐ.டி. விங் செயலாளர் – தம்பி டி.ஆர்.பி.ராஜா மற்றும் அணியினருக்கு, நன்றி!

எல்லாவற்றுக்கும் மேல், இயக்கம் தான் பெரிது – கொண்ட கொள்கைகள் தான் பெரிது என்று, அன்றாட வாழ்க்கையிலும், சமூக வலைத்தளங்களிலும் கழகத்திற்காகப் போராடுகிற – களமாடுகிற, தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளான உங்களுக்கு வணக்கம்!

தந்தை பெரியார் பிறந்தநாள் – பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் –கழகம் தோன்றிய நாள் என்று, இந்த மூன்று நாட்களையும் இணைத்து, முப்பெரும் விழா என்று 1985 முதல் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். தலைமைக் கழகத்தின் சார்பில் மட்டுமல்ல, ஒவ்வொரு அணியும், மாவட்டக் கழகங்களும் கூட தனித்தனியாக, இந்த செப்டம்பர் மாதம் முழுவதும் முப்பெரும் விழாவைக் கொண்டாடுகிறார்கள். அந்த வரிசையில்தான் ஐ.டி. விங், இந்த ஸ்பேசஸ்–ற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

**பேச, எழுத, நம்மிடம் கருத்துகளும் கொள்கைகளும் ஏராளம்!**

2000 ஆயிரம் ஆண்டுகள் ஒடுக்கப்பட்ட நாம் மீண்டெழுந்த வரலாறு – தந்தை பெரியார் காட்டிய பகுத்தறிவு – சமத்துவப் பாதை, பேரறிஞர் அண்ணா வகுத்துக் கொடுத்துள்ள கருத்தியல் தளம், தமிழினத் தலைவர் வடித்து கொடுத்த ஐம்பெரும் முழக்கங்கள் – 2018–ஆம் ஆண்டு நான் செயல் தலைவரான பிறகு முன்வைத்த ஐம்பெரும் முழக்கங்கள் என்று, ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற எதிர்காலத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான திட்டங்கள் என்று நாம் பேச – எழுத கொள்கைகளும் கருத்துகளும் ஏராளமாக இருக்கிறது.

ஒரு காலத்தில், நம்முடைய கொள்கைகளைப் பரப்ப, பேச்சு மேடை – நாடக மேடை – திரையுலகம் – எழுத்துலகம் என்று மக்களை ‘ரீச்’ செய்வதற்கான அனைத்து மீடியத்தையும் பயன்படுத்திக்கொண்டோம்.

பாட்டு, கவிதை, கதை, நாவல், திரைப்படம், நாடகம், நாளிதழ், வார இதழ், மாத இதழ் என்று எவ்வாறெல்லாம் மக்களிடம் பேச முடியுமோ, அவ்வாறெல்லாம் பேசினோம். ‘முரசொலி பொங்கல் மலர்’ எல்லாம் பாத்தீர்கள் என்றால், பொக்கிஷம் மாதிரி இருக்கும். அவ்வளவு கருத்துகள் நிறைந்திருக்கும்.

தி.மு.க.காரன் எந்த அளவிற்குக் கொள்கை வெறியுள்ளவன் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன்…

ஒரு முறை, பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு தொண்டருக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்தார், ஆனால் அந்தத் தொண்டர், தனக்கு அந்தப் பொறுப்பு வேண்டாம் என்று சொல்லி விட்டார். ‘என்ன காரணம்?’ என்று அண்ணா கேட்டார். “எனக்கு வசதி இல்லை… ஏழை” என்று அந்தத் தொண்டர் சொன்னார். அவருடைய தயக்கத்தைப் புரிந்துகொண்ட அண்ணா, என்ன சொன்னார் தெரியுமா?

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### நாடாளுமன்றத் தேர்தல்: தொகுதிப் பார்வையாளர்கள் -

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

**சென்னை, அக். 01 -**

**நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக இன்று (01.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.**

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள், புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதி என 40 இடங்களிலும் தி.மு.க. கூட்டணி தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான பணிகளை தி.மு.க. தொடங்கி செய்து வருகிறது. அந்த வகையில், மண்டல வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டங்கள் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு கட்சியினருக்கு அறிவுரை வழங்கி வருகிறார். வரும் நாடாளுமன்றத் தேர்தல் எவ்வளவு முக்கியம், வாக்குச்சாவடி முகவர்கள் எப்படி செயல்பட வேண்டும், சமூக வலைதள பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து முதல்வர் ஸ்டாலின் அவர்கள் எடுத்துரைத்து வருகிறார்.

இதேபோல் தி.மு.க.வின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை விரைவுபடுத்தும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக, இன்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:

**தமிழ்நாடு முதல்வர், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (அக்.1ம் தேதி) காலை 10.30 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

**அக். 2 – காந்தி ஜெயந்தி அன்று 12, 525 கிராம ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம்!**


**காணொலி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்!**

2 ஆம் பக்கம்

### தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (5)

### அக்டோபர் 4 புதன்கிழமை வெளிவருகிறது !



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “ முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று அறிவிக்கப் பட்டு, இதுவரை 4 சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**அக்டோபர் 2 - திங்கள் கிழமை, அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாள் என்பதால், அன்று முரசொலிக்கு விடுமுறை.**

**எனவே அக்டோபர் 4, புதன்கிழமை அன்று, முரசொலி சிறப்பிதழ்(5), “தமிழ்த் திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

அக். 2- காந்தி ஜெயந்தி அன்று - ‘எல்லார்க்கும் எல்லாம்’ எனும் மையக் கருத்தின்படி

# தமிழ்நாட்டில் - 12,525 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - காணொலிக் காட்சி வாயிலாக உரையாற்றுகிறார்!

**சென்னை, அக்.1-**

**தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி அக். 2 அன்று 12,525 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது. இக்கூட்டங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக உரையாற்றுகிறார்.**

அதன் விபரம் வருமாறு :

மக்களதிகாரத்திற்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் கிராம ஊரட்சிகளில் ஆண்டுதோறும் நடைபெறும் 4 கிராம சபைக் கூட்டங்கள் என்பதை 6 ஆக உயர்த்தி அரசாணையிட்டு கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறுவது உறுதி செய்யப்படுகிறது.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்றுரைத்த உத்தமர் காந்தியடிகளின் பிறந்ததினமான அக்டோபர் 2ஆம் நாளில் நடைபெற உள்ள கிராமசபைக் கூட்டங்களில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளும் வகையில் அனைத்து கிராம ஊராட்சிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டங்களில் பொதுமக்கள் அதிக அளவில் கலந்து கொள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திடும் வகையில் கிராமசபைக் கூட்ட அழைப்பிதழ் ஒன்று வடிவமைக்கப்பட்டு ஊரக வாழ் பொது மக்களுக்கு இல்லம் தோறும் வழங்கப்பட்டுள்ளது.

“எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்” என்கிற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வரிகளுக்கிணங்கவும், முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி “அனைவரையும் உள்ளடக்கிய, பொறுப்புள்ள மக்கள் நலனை மையமாகக் கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்தினை நோக்கிய இந்த கிராம சபையின் கருப்பொருளாக “எல்லார்க்கும் எல்லாம்” என்கிற மையக்கருத்தின்படி நடத்தப்படவுள்ளது.

இவ்வழைப்பிதழ் கிராமசபைக் கூட்டத்திற்கான கருப்பொருளான “எல்லார்க்கும் எல்லாம்” எனும் மைய கருத்துடன் அரசு செயல்படுத்தும் அனைத்து முன்மாதிரி திட்டங்கள் மூலம் பயன்பெற்றோர் விவரம், கிராம ஊராட்சியின் வரவு செலவு கணக்கு விவரங்கள், ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் / பணிகள் மற்றும் அதனால் பயன்பெறும் பயனாளிகள் ஆகியன அடங்கிய கையடக்க விழிப்புணர்வு பிரதிகள் மூலம் அனைத்து வீடுகளுக்கும் விநியோகிக்கப்பட உள்ளது.

இவ்வரசின் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் முத்தான திட்டங்களான விடியல் பயணம்-மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து சேவை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஆகியவை குறித்து பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் விதமாக திட்டசெயலாக்கம், பயனாளிகள் தேர்வு விவரம், திட்டத்தின் பயன்கள் குறித்து குறும்படங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் காட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிராமசபை கூட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி குறும்பட உரையின் மூலம் 2.10.2023 அன்று துவக்கி, கிராம சபை குறித்த கருத்துக்களைத் தெரிவித்திட உள்ளார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தொடர்புடைய மாவட்டங்களில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கிராமசபைக் கூட்டத்திற்கான உத்தேசப் பொருட்கள் அடங்கிய வழிகாட்டுதல்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக கிராம ஊராட்சிகளுக்கு அனுப்ப ப்பட்டுள்ளது. இதில், பொதுவான விவாதப் பொருட்களாக, ஊராட்சிகளின் நிதி நிலை அறிக்கை, டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு, மழைநீர் சேரிப்பு, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் திட்டம், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, பிரதமமந்திரி ஊரக குடியிருப்பு திட்டம், மக்கள் திட்டமிடல் இயக்கம் மற்றும் இதர பொருட்களுடன் விவாதம் நடைபெற உள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலைமதிப்பற்ற உயிர்களைத் தொடர்ந்து காத்திட

# பொதுமக்கள் மனமுவந்து தன்னார்வ ரத்த தானம் செய்திட முன்வாரீர்!

## தேசிய தன்னார்வ இரத்ததான நாள் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, அக்.1-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தேசிய தன்னார்வ இரத்ததான நாளையொட்டி விடுத்துள்ள செய்தியில், “விலைமதிப்பற்ற உயிர்களைத் தொடர்ந்து காத்திட, பொதுமக்கள் அனைவரும் மனமுவந்து தன்னார்வ இரத்ததானம் செய்திட முன்வர வேண்டும்!” என வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேசிய தன்னார்வ இரத்ததான நாள் செய்தி வருமாறு:

இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்த தான தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தின் கருப்பொருள் “தொடர்ந்து இரத்தம், பிளாஸ்மா தானம் செய்வோம், வாழ்வைப் பகிர்ந்து கொள்வோம்” என்பதாகும்.

அறிவியலில் ஏராளமான கண்டு பிடிப்புகள் நிகழ்ந்திருந்தாலும் இரத்தம் என்ற உயிர் திரவத்தை இன்னும் செயற்கையாக உருவாக்க இயலவில்லை. ஒவ்வொருவரின் உடலிலும் உள்ள சுமார் 5 லிட்டர் இரத்தத்தில், இரத்த தானத்தின் போது 350 மி.லி இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இரத்த தானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்த தானம் செய்தவுடன் வழக்கம் போல் அன்றாட வேலைகளை மேற்கொள்ளலாம். 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானம் செய்யலாம்.

உரிய கால இடைவெளியில் இரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி அவர்களின் உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு இரத்த மையங்கள் மற்றும் இரத்த தான முகாம்களில் தன்னார்வமாக இரத்த தானம் செய்யலாம்.

இரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான e-RaktKosh வலைதளத்தில், இரத்ததான முகாம் மற்றும் இரத்த கொடையாளர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுமக்கள் இத்தளத்தைப் பயன்படுத்தி தங்களுக்கு தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக் கொள்ளலாம்.

தானமாகப் பெறப்படும் ஒரு அலகு இரத்தம் 4 உயிர்களை காப்பாற்றும். இவ்வாறு பிறர் உயிர் காக்க உதவிடும் இரத்தக் கொடையாளர்கள் மற்றும் இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

கடந்த ஆண்டு அரசு இரத்த மையங்கள் மூலம் 95 விழுக்காடு இரத்தம் சேகரிக்கப்பட்டு, தன்னார்வ இரத்த தானத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வது குறித்து பெருமையடைகிறேன். நடப்பு ஆண்டில், தன்னார்வ இரத்ததானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்தி, விலைமதிப்பற்ற உயிர்களை தொடர்ந்து காத்திட, பொதுமக்கள் அனைவரும் மனமுவந்து தன்னார்வ இரத்த தானம் செய்திட முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**‘மகிழ்வுடன் இரத்த தானம் செய்திடுவோம்!**

**மனித உயிர்களை காத்திடுவோம்!!**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தாம்பரம் - மங்களூரு இடையே

# பண்டிகைக் கால சிறப்பு ரயில்!

*சென்னை, அக்.01-*

*பண்டிகை காலம் நெருங்கி வருவதால், ரயில்களில் பயணிகளின் கூட்ட நெரிசல் அதிகரித்துள்ளது. இதனால், பண்டிகை கால சிறப்பு கட்டண சிறப்பு ரயில்களை இயக்கும் பணியில் ரயில்வே நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இந்தவகையில், சேலம், ஈரோடு, கோவை வழியே பண்டிகை கால சிறப்பு ரயிலாக தாம்பரம் - மங்களூரு இடையே வாராந்திர சிறப்பு ரயிலை இயக்குவதாக தெற்கு ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.*


*இதன்படி, தாம்பரம் - மங்களூரு வாராந்திர சிறப்பு கட்டண சிறப்பு ரயில் (06049) அக்டோபர் 6, 13, 20, 27ம் தேதிகளில் (வெள்ளி தோறும்) இயக்கப்படுகிறது.*

*தாம்பரத்தில் மதியம் 1.30 மணிக்கு புறப்படும் இந்த ரயில், எழும்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை வழியே சேலத்திற்கு இரவு 7.20 மணிக்கு வந்து சேர்கிறது. பின்னர், 5 நிமிடத்தில் புறப்பட்டு ஈரோட்டிற்கு இரவு 8.25க்கும், திருப்பூருக்கு இரவு 9.13க்கும், கோவைக்கு இரவு 10.12க்கும் சென்று, பாலக்காடு, கோழிக்கோடு, பையனூர், காசர்கோடு வழியே மங்களூருக்கு அடுத்தநாள் காலை 7.30 மணிக்கு சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், மங்களூருதாம்பரம் வாராந்திர சிறப்பு கட்டண சிறப்பு ரயில் (06050) நேற்று (30ம் தேதி), அக்டோபர் 7, 14, 21, 28ம் தேதிகளில் (சனிக்கிழமை தோறும்) இயக்கப்படுகிறது.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் வீட்டு வசதி வாரியம் சார்பில் மறுமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட இருக்கும் நந்தனம் வீட்டு வசதி வாரிய தாமரை குடியிருப்புகளையும் வாடகைக் குடியிருப்புகளையும் நந்தனத்தில் உள்ள பழைய வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகக் கட்டடத்தையும் நேற்று முன்தினம் (29.09.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினர். வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, தலைமைப் பொறியாளர் (நகரம்) கண்ணன், மேற்பார்வைப் பொறியாளர் லக்ஷ்மி நாராயணன், செயற்பொறியாளர் குமரேசன் உள்ளிட்ட துறை அதிகாரிகள் மற்றும் தி.மு.க. இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** ஏண்ணே; ஒன்றியத்தில் நிலையான ஆட்சியினால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி-என்று தமிழ்நாடு ஆளுநர் ரவி, சிவகாசியில் பேசியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; **ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதா என்பது விவாதத்திற்குரிய தலைப்பு.**

**ஆனால், ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் ஊழல்-முறைகேடுகள் வளர்ந்திருக்கின்றன என்பதற்கு இந்தியத் தலைமைக் கணக்காயரின் அறிக்கையே சான்றாவணம்!**

**சிறுபான்மையினர்க்கு எதிரான வெறுப்பும், துவேஷமும், பா.ஜ.க.வினரால், இதுவரை சரித்திரம் காணாத அளவுக்கு அதிகமாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சம்பவங்களே சாட்சி !**

**இப்படி எதையெதை வளர்த்திருக்கிறார்கள் - கொடுத்த வாக்கை எந்தவிதம் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டே போகலாம்.**

**ஆளுநர் பேச்சை யாரும் பொருட்படுத்துவதில்லை. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக பரப்புரை மேற்கொள்ள ஆளுநர், ‘திராவிட மாடல்’ ஆட்சியின் செலவில் பயிற்சி - ஒத்திகை மேற்கொண்டுள்ளார் !**



# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் - கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா தொடர் 100 நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

திருமதி. **ராதிகா சரத்குமார்**

நடிகர். **சூரி**

நடிகர். **ஸ்ரீமன்**

அன்புடன்:

83வது வட்ட திமுக - அம்பத்தூர் தெற்குகிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 65**

**ஆயுளை மீட்பது மருத்துவம்**
**அறிவினில் கலைஞர் தனித்துவம்**

நாள்: 01.12.2023 , வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: உமா சுராஜ் மகால், அங்காளம்மன் கோயில் தெரு,

தலைமை: சொ. வேலு, எம்.சி., ( எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்)

எழும்பூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர்.**நா.எழிலன்**, எம்.எல்.ஏ., (கழக மருத்துவ ரணிச் செயலாளர்)

அன்புடன்:

78 அ வட்ட திமுக - எழும்பூர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 66**

**போற்றுவோம் கலைஞர் புகழை**
**ஏற்றுவோம் அவரின் சுடரை**

நாள்: 02.12.2023 , சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: மேனாம்பேடு சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை

தலைமை: M.கமல், எம்.சி., (வட்டச் செயலாளர்)

வாழ்த்துரைப்போர்:

திரு. **திருச்சி N. சிவா**, எம்.பி., கழக கொள்கை பரப்பு செயலாளர்

திரு.**சு.வெங்கடேசன்** - மாநில செயற்குழு உறுப்பினர் CPM

அன்புடன்:

86வது வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 67**

**வெற்றியே வீரரின் இலக்கு**
**வழங்கிடும் சூரிய கிழக்கு**

நாள்: 03.12.2023 , ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: பந்தர்கார்டன் பள்ளி மைதானம்

தலைமை: ம. அசோக்குமார் (மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர்)

கிரிக்கெட் போட்டியை துவக்கி வைப்பவர்

திரு.**தயாநிதிமாறன்**, எம்.பி.,

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்

அன்புடன்: மாவட்ட விளையாட்டு அணி

கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 68**

**கூடுவோம் திராவிட ஒளியேற்றி!**
**பாடுவோம் கலைஞர் புகழ்போற்றி!**

நாள்: 07.12.2023 வியாழன், மாலை: 6.00 மணி

இடம்: ரமணா நகர், பெரம்பூர், கொளத்தூர் தொகுதி

தலைமை: துரைக்கண்ணன் (வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்)

சின்னத்திரை பிரபலங்களின் இன்னிசை பட்டிமன்றம்

**நடுவர்** : இன்னிசை. சொல்லரசி - கல்பாக்கம் ரேவதி

**தலைப்பு** : முத்தமிழறிஞரின் சீரிய புகழுக்கு அடித்தளமானது அவரது எழுத்தாளுமையா? அவரது சொல்லாளு மையா?

**எழுத்தாளுமையே**

விஜய்டிவி /சன்டிவி புகழ் -திருச்சி அன்னலட்சுமி

சன்டிவி/ஆதித்யா டிவி புகழ்முனைவர் சேலம் அபு

**சொல்லாளுமையே**

விஜய்டிவி புகழ் - கல்பாக்கம் காயத்திரி

விஜய்டிவி/சன்டிவிபுகழ் - கோவில்பட்டி அன்னபாரதி

**இசை** - எழில் ரிதம்ஸ்

அன்புடன்:மாவட்ட வழக்கறிஞர் அணி

கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 69**

**நிலம் போற்றும் முத்தமிழறிஞர்**
**நிதம் போற்றும் தமிழினத் தலைவர்**

நாள்: 09.12.2023 , சனிக்கிழமை, மாலை: 6.00 மணி - இடம்: ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்.

தலைமை: வே. வாசு (வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர்)

போற்றுவோர்

திரு. **இரா. முத்தரசன்** (மாநில செயலாளர் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

திரு.**கே.எம்.காதர் மொய்தீன்**

தலைவர்இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திரு.**பி.வி.கதிரவன்**

மாநில பொதுச்செயலாளர் - இந்திய பார்வர்டு பிளாக்

அன்புடன்:

96வது வட்ட திமுக - வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 70**

**சமூக சமத்துவம் சாதித்தவர்**
**பாலின சமத்துவம் போதித்தவர்**

நாள்: 10.12.2023 , ஞாயிற்றுக்கிழமை, மாலை : 4.00 மணி . இடம்: எஸ்.ஆர்.மகால், ராட்லர்ஸ் ரோடு

தலைமை: ராஜேஸ்வரி ஸ்ரீதர் ( மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்)

திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்

**ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக. ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

(திருகயிலாயப் பரம்பரைத் தருமையாதீனம் 27வது குரு சந்திதானம்)

அன்புடன்: மாவட்ட மகளிர் தொண்டரணி

எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 71**

**கற்றுத் தந்த கலை மேதை**
**கழகம் நடப்பது அவர் பாதை**

நாள்: 13.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: கிருஷ்ணதாஸ் சாலை, ஜமாலியா

தலைமை: பி. உதயசங்கர் (பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்)

திரைப்பிரபலங்கள் பங்கேற்கும் இன்னிசை நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்

திரு.**அர.சக்கரபாணி** (உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

இன்னிசை வழங்குவோர்: M.K.T. ராஜாவின் தீம் திரனா

பாடுவோர்:

**கானாபாலாமாலதி**

**முகேஷ்வேல்முருகன்**

அன்புடன்:

மாவட்ட வர்த்தகர் அணி - 74வது வட்ட திமுக

**கலைஞர் 100 – 72**

**தமிழோவியம் வரைந்த தலைவர்**
**குறளோவியம் புனைந்த கலைஞர்**

நாள்: 16.12.2023 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: தம்பு செட்டி தெரு, மண்ணடி.

தலைமை: எஸ். ராஜசேகர்

துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர்

புகழுரைப்போர்:

திரு.**ஜி.விஸ்வநாதன்** (நிறுவனர் - வி.ஐ.டி. பல்கலைக்கழகம்)

திரு.**ராம.சுப்பிரமணியன்** - அரசியல் விமர்சகர்

திரு.**கவிஞர்.பா.விஜய்** - நடிகர் பாடலாசிரியர்

அன்புடன்:

60. 60அ வட்ட திமுக - துறைமுகம் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 73**

**திராவிட நாட்டின் விளக்கு**
**தென்னாட்டின் கிழக்கு**

நாள்: 20.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: YMCA, ரித்தர்டன் ரோடு

தலைமை: ஆர்.பாபு, வட்டகழக செலாளர்

போற்றுவோர்:

எழுத்தாளர்.**சிவசங்கரி**

எழுத்தாளர். **இந்துமதி**

இயக்குனர். **தங்கர்பச்சான்**

அன்புடன்:

58அ வட்டம் - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 74**

**நோயற்ற சமூகம் வேண்டி நின்றவர்**
**நூறாண்டு கடந்தும் வாழுகின்றவர்**

நாள்: 22.12.2023 , வெள்ளிக்கிழமை, காலை : 9.00 மணி , இடம்: காஸா கிராண்ட் வளாகம்

தலைமை: செ.தமிழ்வேந்தன்

திரு.விக.நகர். வடக்கு பகுதி செயலாளர்

திரு.வி.க.நகர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர் **கலாநிதி வீராசாமி**, எம்.பி

கழக அயலக அணித்தலைவர்

அன்புடன்:

71 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 75**

**இலக்கியம் தந்தவர்**
**இலட்சியம் வென்றவர்**

நாள்: 27.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: வெங்கட்டம்மா சமாதி, சூளை, ஓட்டேரி.

தலைமை: எஸ்.சசிக்குமார் வட்டக் கழக செயலாளர்

போற்றுவோர்: **முனைவர்.க.பொன்முடி**

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்

திரு.**ஈ.ஆர்.ஈஸ்வரன்**,எம்.எல்.ஏ.,(பொதுச் செயலாளர் - கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி)

திரு.**பொன்குமார்** (தலைவர்தமிழ்நாடு விவசாயிகள் தோழமைக்கட்சி - தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத் தலைவர்)

அன்புடன்:

76வது வட்ட திமுக - திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 76**

**ஏற்றம் தந்தவர் - மாற்றம் கண்டவர்**

நாள்: 30.12.2023 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: ஜெயின்பள்ளி வளாகம், அகரம்

தலைமை: கே.சந்துரு (தலைமை செயற்குழு உறுப்பினர்)

புகழுரைப்போர்:

திருமிகு. **கனிமொழி கருணாநிதி**, எம்.பி.,

கழக துணைப் பொதுச் செயலாளர்

பத்திரிக்கையாளர் **பிரியன்**

இயக்குனர். வி.**சி. குகநாதன்**

கவிஞர். **யுகபாரதி**

அன்புடன்:

68வது வட்ட திமுக - கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 77**

**தனித்துவத் தலைவர் - தமிழாண்ட கலைஞர்**

நாள்: 03.01.2024 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: மலையாளி கிளப், கிளப்ரோடு, சேத்துப்பட்டு

தலைமை: V.சுதாகர் (எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர்

புகழுரைப்போர்:

மேனாள்.**நீதியரசர்.கே.சந்துரு**

திருமதி. **உ.வாசுகி**

திரு.**கம்பம் செல்வேந்திரன்**

திரு. **ஓ.ஏ. நாகலிங்க**ம்

அன்புடன்:

58, 58அ வட்ட திமுக - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 78**

**உலகத் தமிழர்களின் இதயம்**
**ஒளிதந்த கலைஞரே உதயம்**

நாள்: 06.01.2024 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: B.K.N. மகால், அனிதா பள்ளி வளாகம்

தலைமை: D.லோகேஷ் ( மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)

முத்தமிழறிரை போற்றும் அயலக வாழ் தமிழ்த்தலைவர்கள்

திரு.**டத்தோ ஸ்ரீ எம்.சரவணன்**

மலேசிய பாராளுமன்ற உறுப்பினர்

ம.இ.கா.தேசியத் துணைத்தலைவர்

முனைவர்.**அருள்ராசா நாகேஸ்வரன்**

எழுத்தாளர் பேச்சாளர்

சுவிஸ் தமிழ் இலக்கிய நிறுவனர்

அன்புடன்:

மாவட்ட இளைஞரணி - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 79**

**இலக்கிய வானில் ஒளிதந்தவர்**
**இலட்சிய பயண வழிதந்தவர்**

நாள்: 07.01.2024 , ஞாயிற்றுக்கிழமை, மாலை: 4.00 மணி , இடம்: இளங்கோ நகர், விளையாட்டு மைதானம், பாடி.

தலைமை: - L.P.F.மோகன் ( மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்)

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையற்தொகையுடன் கூடிய சீருடைகள் வழங்குபவர்

அமைச்சர் .**கே.என்.நேரு** (நகராட்சி நிர்வாகத்துறை)

அன்புடன்:

89வது வட்டம் - அம்பத்தூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 80**

**திசையெங்கும் அவர்சொல் ஒளியானது**
**திராவிட மாடலின் வழியானது**

நாள்: 10.01.2024 , புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில், வில்லிவாக்கம்

தலைமை: வானவில் விஜய் (மாவட்ட மாணவரணி அமைப்பாளர்)

போற்றுவோர்: திரு.**எஸ்.திருநாவுக்கரசு**

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்

திரு.**அன்பில் மகேஷ் பொய்யாமொழி**

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

அன்புடன்: மாவட்ட மாணவரணி

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

சென்னை கிழக்கு மாவட்டம்

பங்கேற்று சிறப்பிப்பவர்கள்..

டி .ஆர்.பாலு .எம்.பி., (கழக பொருளாளர், நாடாளு மன்ற குழுத்தலைவர்), தயாநிதி மாறன் .எம்.பி., (கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்), மேயர் பிரியா ராஜன்,(தலைமை செயற்குழு உறுப்பினர்) டாக்டர். கலாநிதி வீராசாமி. எம்.பி,(கழக மருத்துவ அணி இணைச் செயலாளர்), இரா.கிரிராஜன் எம்பி., (கழக சட்டத்துறை செயலாளர்), ப. தாயகம் கவி. எம். எல்.ஏ, (கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்), ஜோசப் சாமுவேல். எம்.எல்.ஏ, (அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர்), இ.பரந்தாமன் எம்.எல். ஏ, (கழக சட்டத்துறை இணைச் செயலாளர்), அ.வெற்றி அழகன். எம்.எல்.ஏ. (கழக பொறியாளர் அணி இணைச் செயலா ளர்,) ப. ரங்கநாதன், (தலைமை செயற்குழு உறுப்பினர்

பி.கே .மூர்த்தி. எம்.சி, (தலைமை செயற்குழு உறுப்பினர். மண்டல குழுதலைவர்) கே.சந்துரு, (தலைமை செயற்குகுழு உறுப்பினர்) , கே.எஸ்.எம். நாதன். (தலைமை செயற்குழு உறுப்பினர்), எம். விஜயகுமார், (தலைமை செயற்குழு உறுப்பினர்) , கே .எஸ்.ரவிச்சந்திரன், (கழக சட்டத்துறை துணைச் செயலாளர்), எஸ். மணி முடி, (மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர்), சங்கரி நாராயணன், (கழக மகளிர் அணி துணைச் செயலாளர்), தமிழன் பிரசன்னா, (கழக செய்தித்தொடர்பு இணைச் செய லாளர்), சரிதா மகேஷ்குமார், (பொதுக்குழு உறுப்பினர், மண்டலகுழுத்தலைவர்),

ப.ஸ்ரீராமுலு, (மண்டலகுழுத்தலைவர், (பகுதி பொரு ளாளர்), கூ.பீ. ஜெயின்.எம்.சி, (மண்டலக்குழு தலைவர், பகுதிச் செயலாளர்), ஜி.சாந்தகுமாரி, எம் சி, தலைவர், பொது சுகாதாரத்துறை / மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர்) சொ.வேலு. எம்.சி, (பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர்), ஆ.தாமோதரன், (தலைமை கழக வழக்கறிஞர்). வே .உமாகாந்த், (கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர்), என்.பி.எம் .ஷேக் அப்துல்லா, (கழக சிறுபான்மை அணி துணைச் செயலாளர் ), பரிதி இளம்சுருதி, எம்.சி., (கழக அயலக அணி துணைச் செயலாளர்), கவிஞர் நன்மாறன், (கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர்),

கோ. ஏகப்பன், மாவட்ட அவைத்தலைவர்,

தேவ ஜவகர், மாவட் துணைச் செயலாளர்,

ஜி .மகாதேவன், மாவட் துணைச் செயலாளர்,

புனிதவதி எத்திராசன் .எம். சி. மாவட்ட துணைச் செயலாளர், இசட்.ஆசாத். எம் .சி.. மாவட்ட பொருளாளர்

**பகுதி செயலாளர்கள்**.. ஐ.சி.எஃப். வ. முரளிதரன், ஏ. நாகராசன்.எம் சி., டி.எஸ்.பி.ராஜகோபால்.எம்.சி., எம் .டி .ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, எஸ். ராஜசேகர், எஸ் .முரளி, வே . வாசு, வி.சுதாகர்.

**பொதுக்குழு உறுப்பினர்கள்**.. எஸ். பன்னீர்செல்வம், கோ. மணி, டி.வி. செம்மொழி, பி.ஜே. துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், பி. உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன்,எம்.சி., எம் இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர். ஏ .பி. பூர்ணிமா. எம். சி. இரா. கலைச்செல்வி, டி .போஸ்.

**மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள்**.. டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பி.ஜெகதீஷ், எஸ். தனசேகர், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், சுதா தீனதயாளன்,எம்.சி., நா. துலுக்காணம், ஜி.தாமோதரன், எம்.பெரோஸ்கான், LPF. மோகன், பி.விஜயகுமார், M.விநாயகம், ராஜேஸ்வரி ஸ்ரீதர்,எம்.சி., ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் எம்.சி., ஆர். எஸ்.சித்திக், கு.கிருஷ்மூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், ஜி.பி.பிரதீப்குமார், ம. அசோக்குமார்,

**மாமன்ற உறுப்பினர்கள்**.. கே. சாரதா, டி .யோக பிரியா, எம் .தாவுத்பீ, பி.அமுதா, சி .ஸ்ரீ தணி, லதா வாசு,

எஸ். தனலட்சுமி, ஆ.பிரியதர்ஷினி, மோ.பானு பிரியா, உஷா நாகராஜ், கே.பொற்கொடி, எஸ். உமா, பாத்திமா அகமது, பி சுமதி. மு. சரவணன், ச. அம்பேத்வளவன். எல். ரமணி. ச.தமிழ்ச்செல்வி, எல் நவீன், வி.பரிமளம், ராஜேஷ் ஜெயின், ம.கமல், எம்.இ.சேகர்,

**வட்ட கழக செயலாளர்கள்**: எழும்பூர் வடக்கு 77 தி. தயாளன், 77அ வி.அபாய், 78 சு. மனோகர், 78அ ந. பாலு, 104 - ஆர்.எம்.ரங்நாதன், 104அ - சி. சேகர்

**எழும்பூர் தெற்கு**

58 வி. விஜயகுமார், 58அ ஆர்.பாபு, 61 டால்பின். எஸ்.அரிகிருஷ்ணன். 61அ இ.மொய்தின், 108 வான்மதி கதிரவன், 108அ எல். சுந்தரராஜன்,எம்.சி.

**திரு.வி.க.நகர் வடக்கு**

71 பரிமளா சுரேஷ்பாபு, 71அ மா.ருத்ரமூர்த்தி, 72 எம்.ஏ.டிக்கா. 72அ எம்.இசட்.அபாய், 74 எஸ். புஷ்பராஜ், 74அ ஜி. கிருஷ்ணகுமார்

**திரு.வி.க.நகர் தெற்கு**

73 எம்.தமிழ், 73அ -பொல்லு.டி. சுரேஷ்குமார் , 75 வி.க.வெங்கடேசன், 76 எஸ். சசிகுமார், 76அ எஸ். வெங்கடேசன்

**கொளத்தூர் கிழக்கு**

66அ பி.உமைதுரை, 67 பி.பொன்முடி, 67அ கே. ஜார்ஜ்குமார், 68 கே.பி.ஆதவன்மணி, 68அ பி.டி.சி. எஸ்.ரவி, 70 ப. அன்பரசு, 70அ டி.சந்திரசேகர்

**கொளத்தூர் மேற்கு**

64 செ. முருகன், 64அ எம்.பி.தமிழ்செல்வன், 65 என்.சௌந்தர், 65அ என்.பவுல்ராஜ், 66 என். இராமச்சந்திரன், 69 எம்.ஜெ.சி.பாபு, 69அ பி.அதிபதி

**துறைமுகம் கிழக்கு**

55 வி.சத்தியநாராயணன், 55அ எஸ். புகழேந்தி, 55ஆ ஆர்.எ.அஸ்லாம், 56 டி. கதிரவன் (எ) ராஜா, 56அ பரத்குமார், 60 கே.கவியரசு, 60அ -ஆ.நா. பார்த்திபன்

**துறைமுகம் மேற்கு**

54 எம். ஜெய்சங்கர், 54அ -பா. கதிரவன், 54ஆ ஆர். ரவிச்சந்திரன், 57 ஜி.இராமமூர்த்தி, 57அ பா. அண்ணா துரை, 59 டி.சதிஷ்குமார், 59அ அ.வே.பா.பிரபாகரன்

**அம்பத்தூர் கிழக்கு**

82 மு.சண்முகம், 82அ ஆ. சுந்தராஜ், 83 சீ. லோக நாதன், 83அ சு.மோகன்குமார், 84 மு. விஜயகு மார், 84அ த.வ.லால்.பி செந்தில்

**அம்பத்தூர் தெற்கு** :

87 த. பிரகாஷ்தயாளன், 88 சி. சீனிவாசன், 89 எம்.இ.சேகர், எம்.சி., 90 நா.நொப்போலியன், 93 இரா. டீக்கா

**அம்பத்தூர் வடக்கு**

79 வே.ரவீந்திரன், 79அ பு.வீரா (எ) வீரராகவன்,

80 வெ. இராதாகிருஷ்ணன், 81 மு. இரகு, 85 த. கண்ணபிரான், 86 ம. கமல்,எம்.சி.,

**வில்லிவாக்கம் கிழக்கு**

96 எ.வேதா, 97 சீ.விக்னேஷ் , 97அ ச.மனோகரன், 98 கே. பாஸ்கர், 98அ எ.தேவராஜ், 98ஆ காஞ்சி செ. துரை

**வில்லிவாக்கம் மேற்கு**

94 சிட்கோ சேகர், 94அ ஆர்.தீனதயாளன், 94ஆ க. சுகுமாரன், 95 மா. அகிலன், 95அ உமாசங்கர், 104 சொ.முருகேசன், 104அ ப.லோகுபாபு 104ஆ ஜெ. தங்கராஜ்

அனைத்து நிகழ்ச்சிகளிலும் அந்தந்த பகுதிக்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழகச் செயலாளர்கள்,

மாவட்ட பிரதிநிதிகள். பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள்.

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**

செயலாளர்

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

(இந்து சமய அறநிலையத்துறை மற்றும்

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் துறை)

# மிக மிகச் சாதாரணமானவர்கள் சேர்ந்து உருவாக்கிய இயக்கம் இது!

## முதல்வர் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

"உன் ஊரில் கரிக்கட்டை இருக்கும் அல்லவா... அதை வைத்து 'உதயசூரியன்' சின்னத்தை வரை... அதுதான் சிறந்த இயக்கப் பணி!" என்று சொன்னார்.

மிக மிகச் சாதாரணமானவர்கள் சேர்ந்து உருவாக்கிய இயக்கம் இது. இங்கு எல்லோருக்கும் வசதி வாய்ப்பு இல்லை... ஆனால் தி.மு.க.வில் எல்லோருக்கும் அறிவார்ந்த கொள்கை இருக்கிறது! அந்தக் கொள்கையை அடைய வேண்டும் என்று இலட்சியம் இருக்கிறது! அதுதான் நம்முடைய பலம்!

அதைத்தான் பேரறிஞர் அண்ணா அந்தத் தொண்டருக்குப் புரிய வைத்தார்!

ஒரு சாதாரண கரிக்கட்டையைக் கூட கருத்தியல் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன் தி.மு.க.காரன்! அதனால்தான், சமூக வலைத்தளங்களை வெறும் பொழுதுபோக்கு அம்சமாகப் பார்க்காமல், சமூகத்தை முன்னேற்றுவதற்கான திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். பெரிய பெரிய மாநாடெல்லாம் நடத்த வேண்டும் என்று இல்லை; நம்முடைய கருத்துகளை - கொள்கைகளை இன்னொருவரிடம் பேசுவதே, மிகப்பெரிய பரப்புரைதான்.

**அவதூறு பரப்பும் கூட்டத்தை அம்பலப்படுத்துவோம்!**

ஃபேஸ்புக் - யூடியூப் - வாட்ஸ் அப் - ட்விட்டர் - இன்ஸ்டாகிராம் - ஷேர்சாட் - டெலிகிராம் என்று நிறைய வசதிகள் வந்துவிட்டது. இவை எல்லாவற்றையும் நம் கொள்கைகளைக் கொண்டு செல்ல - கட்சியை வளர்க்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! நம்முடைய சாதனைகளைச் சொல்ல வேண்டும்! மக்களை திசைதிருப்ப - ஏமாற்ற அவதூறு பரப்பும் கூட்டத்தை அம்பலப்படுத்த வேண்டும்! இதையெல்லாம் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். இதைக் கவனத்தில் வைத்துச் செயல்படுங்கள்.

அவ்வாறு செயல்படும் ஐ.டி. விங்-ஐ சேர்ந்தவர்களுக்கும் - தங்களின் அடையாளத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் கட்சிக்காக உழைக்கும் பலருக்கும் நன்றி!

**உங்களோடு நெருக்கமாக இருக்கப் பயன்படும் சமூக வலை தளங்கள்!**

உங்களின் பெரும்பாலான 'ட்வீட்ஸ்-ஐ'.. மன்னிக்க வேண்டும், ட்விட்டர் இப்போது, 'எக்ஸ்' ஆகிவிட்டது அல்லவா... உங்களின் பெரும்பாலான 'எக்ஸ்' பதிவுகள் என்னுடைய கவனத்திற்கு வந்துவிடும். சிலரின் பதிவுகளை ரசித்துப் படிப்பேன். அதேசமயம், ஏதாவது குறையோ - புகாரோ சொன்னீர்கள் என்றால், உடனே அதைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகிறேன். அந்த வகையில், உங்களோடு நெருக்கமாக இருப்பதற்கான வாய்ப்பாகத்தான் சமூக வலைதளங்களை நான் பார்க்கிறேன். இதையேதான் உங்களிடமும் நான் எதிர்பார்க்கிறேன்.

சக மனிதர்களிடம் நெருக்கமாக சமூக வலைத்தளங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களிடம் நம்முடைய கொள்கைகளை - சாதனைகளைச் சொல்லுங்கள். ஒரே வட்டத்திற்குள் நாம் சுருங்கிடாமல், வெவ்வேறு தளங்களை நாம் 'ரீச்'-ஆக சமூக வலைதளங்கள் பயன்படுகின்றன.

அதனால்தான், நான்கூட இப்போது 'ஸ்பீக்கிங் ஃபார் இந்தியா' என்ற பாட்காஸ்ட் சீரிஸ்-ஐத் தொடங்கியிருக்கிறேன். ஏற்கனவே இரண்டு எபிஸோட் வந்துவிட்டது, விரைவாகவே அடுத்ததும் வரும். இந்தப் பாட்காஸ்ட் சீரிஸ், தமிழ்நாட்டைத் தாண்டி நம்முடைய கருத்துகளை, தெலுங்கு - மலையாளம் - கன்னடம் - இந்தி என்று வெவ்வேறு மொழிகளில் கொண்டு செல்கிறோம்.

**தேர்தல் பிரச்சாரம் - சேர்ந்து முன்னெடுப்போம்! வெற்றி பெறுவோம்!**

"என்னடா இது, இவர்கள் தமிழ்நாட்டில் முடங்கிக் கிடப்பார்கள் என்று பார்த்தால், இந்தி பேசும் மாநிலங்களுக்கும் வந்துவிட்டார்கள்" என்று புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

பார்லிமெண்ட் எலக்‌ஷனுக்கான என்னுடைய பிரச்சாரத்தை நான் தொடங்கிவிட்டேன்; நாம் சேர்ந்து முன்னெடுப்போம்! வெற்றி பெறுவோம்!

இந்திய அரசியலில் எல்லாவற்றுக்கும் முன்னோடியாக இருக்கும் நாம்தான், இந்த மாதிரி 'பாட்காஸ்ட்' பிரச்சாரத்திலும் முன்னோடியாக இருக்கிறோம். இவ்வாறு எல்லாவற்றிலும் நாம் அப்டேட்டாகவும் இருக்க வேண்டும்; அட்வான்ஸாகவும் இருக்க வேண்டும்! அதனால்தான், இப்போது நம்முடைய கருத்துகள் மற்ற மொழி ஊடகங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்தியாவுக்காகப் பேசுவோம் - எபிஸோட் 1 மற்றும் 2, இதுவரை பல லட்சம் பேரால் கேட்கப்பட்டுள்ளது.

இதெல்லாம் பத்து, பதினைந்து மாநாடு நடத்தியதற்குச் சமம்.

**கொள்கைகள், சாதனைகளை எடுத்துச் சொல்வோம்!**

மாநாடு என்றால் நம்முடைய ஆட்கள்தான் பெரும்பாலும் வருவார்கள். ஆனால், நம்மை எதிர்ப்பவர்கள் கூட, இதைக் கேட்கிறார்கள். இதன் மூலமாக வீண் வெறுப்பிலும் - பொய்களை நம்பி அறியாமையிலும் இருக்கும் அவர்கள், உண்மைகளைப் புரிந்துகொண்டு மனம் மாறுவார்கள். நம்முடைய கொள்கைகளையும் - சாதனைகளையும் சொல்வதற்கு மட்டுமே நாம் சமூக வலைதளங்களை பயன்படுத்துவோம்.

அ.தி.மு.க.வும் - பா.ஜ.க.வும் பொய்ச் செய்திகளையும் அவதூறுகளையும் பரப்புவதற்காகவே சம்பளம் கொடுத்து வேலைக்கும் - கூலிக்குத் தனியாகவும் ஆட்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் என்றைக்காவது கொள்கையைப் பேசிப் பார்த்து இருக்கிறீர்களா?

> *கள்ளக்கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரப்பும் பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. ஆனால், நம்முடைய கொள்கைகளுக்கு வலிமை அதிகம்! அதனால்தான், 75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இளமை மாறாமல் இருக்கிறது. மக்களும், ஆறு முறை தமிழ்நாட்டை ஆளும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.*

**அ.தி.மு.க.விற்கு கொள்கை என்ற ஒன்றே கிடையாது!**

சமூகத்தில் ஏற்றத்தாழ்வை ஆதரித்து - வெறுப்பை விதைக்கும் பா.ஜ.க.வால் அதன் கொள்கையை தமிழ்நாட்டில் பேச முடியாது. அ.தி.மு.க.விற்குக் கொள்கை என்ற ஒன்றே கிடையாது. எந்தப் பிரச்சினைகளிலும் கொள்கை சார்ந்த நிலைப்பாடு கிடையாது. அதனால், அவர்கள் நாள்தோறும் நம்மைப் பற்றி அவதூறு பரப்புவார்கள். அதற்கெல்லாம் யாரும் முக்கியத்துவம் தராதீர்கள்.

மக்கள் தங்களை அடையாளம் கண்டுபிடித்துவிட்டார்கள் என்று உணர்ந்துவிட்டாலே கூலிகளுக்குப் பதற்றம் வந்துவிடும். என்னதான் கத்தினாலும், சீண்டினாலும் தி.மு.க.காரர்கள் நம்மை கவனிக்கவில்லையே என்று அடிமைக் கும்பலுக்கு விரக்தி வந்துவிடும்.

இப்போதுகூட, பேரறிஞர் அண்ணா மன்னிப்பு கேட்டார் என்று ஒரு செய்தியைப் பரப்பினார்கள், அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று இந்து ஆங்கில நாளிதழே மறுத்துவிட்டது.

அடுத்து, மருதமலை கோயிலுக்கு, தி.மு.க. ஆட்சி மின் இணைப்பு தரவில்லை என்று பரப்பினார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு 5 வருடத்திற்கு முன்பே மருதமலை கோயிலில் மின் இணைப்பு வந்துவிட்டது என்று கல்வெட்டு ஆதாரம் காட்டி இருக்கிறார்கள்.

பா.ஜ.க.விற்குப் பொய் சொல்வது எந்த அளவிற்கு பழக்கம் ஆகிவிட்டது என்றால், பிரதமர் தொடங்கி ஒன்றிய அமைச்சர்கள் பலரும் பொய்களை உண்மை என்று நினைத்து நாடாளுமன்றத்திலேயே பேசுகிறார்கள். இவ்வாறு அவர்கள் பொய்களைப் பரப்பிக்கொண்டே இருப்பார்கள். நாம் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டு இருக்க முடியுமா? நமக்கு ஆக்கப்பூர்வமான வேலைகள் நிறைய இருக்கின்றன. எதிர்காலத்தில் தமிழ்நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் நாம் எதிர்த்தும் போராடியாக வேண்டும். எவ்வாறு, நீட் தேர்வின் அபாயத்தை முன்பே உணர்ந்து, நாம் போராட ஆரம்பித்தோமோ, அவ்வாறு நிறைய வேலைகள் நமக்கு இருக்கிறது.

கள்ளக்கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரப்பும் பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. ஆனால், நம்முடைய கொள்கைகளுக்கு வலிமை அதிகம்! அதனால்தான், 75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இளமை மாறாமல் இருக்கிறது. மக்களும், ஆறு முறை தமிழ்நாட்டை ஆளும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

**பா.ஜ.க.வின் பொய் முகத்திரையைக் கிழிக்கப்போம்!**

அடுத்து, நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகிறது. 'நாற்பதும் நமதே! நாடும் நமதே!' என்று நம்முடைய முழக்கத்தைச் சொல்லி வருகிறோம். தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. இந்தியா முழுவதும் நம்முடைய 'இந்தியா கூட்டணி'தான் வெற்றி பெற வேண்டும்.அதற்கு பா.ஜ.க.வின் பொய் முகத்திரையைக் கிழிக்க வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக, கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றாமல், பா.ஜ.க. பம்மாத்து செய்துகொண்டு இருக்கிறது என்பதை அம்பலப்படுத்த வேண்டும்.

'டைவர்ஷன் பாலிட்டிக்ஸ்'தான் அவர்களின் ஆயுதம். உண்மையான பிரச்சினைகளைப் பற்றி எப்போதுமே பேச மாட்டார்கள். பிரச்சினையே இல்லாத ஒன்றைப் பற்றி, திரும்பத் திரும்பப் பேசிப் பிரச்சினையாக ஆக்குவார்கள். அதற்கு சில ஊடகங்களும் துணை செல்லும். இதைக் கரெக்ட்டாகப் புரிந்து கொண்டாலே போதும்!

'சந்திராயன் விட்டோம். ஜி-20 மாநாடு நடத்தினோம்' என்று பிரதமர் நரேந்திர மோடி படம் காட்டிக்கொண்டு இருக்கிறார். அவர் இதற்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் என்ன ஆயின என்று நினைவூட்டி, அந்த வீடியோக்களை அதிகம் பரப்புங்கள்.

'ஆட்சிக்கு வந்தால் கருப்புப் பணத்தை மீட்டு, ரூபாய் 15 லட்சம் கொடுப்போம்' என்று பிரதமர் மோடி சொன்னதையும் - அதெல்லாம் உங்களை ஏமாற்றுவதற்காக சொன்ன 'ஜூம்லா' என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா சொன்னதையும் அதிகமாகப் பரப்புங்கள்.

**மணிப்பூருக்கு பிரதமர் ஒருமுறை யேனும் சென்றாரா?**

"இந்திய மகளிர்களுக்காக இப்போது உருகுகிற மாதிரி நடிக்கும் பிரதமர் அவர்களே! மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டபோது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? மணிப்பூருக்குப் போய் பாதிக்கப்பட்டவர்களைப் பாத்தீர்களா?" என்று கேள்வி எழுப்புங்கள். "மல்யுத்த வீராங்கனைகள் பா.ஜ.க. எம்.பி. மேல் சொன்ன பாலியல் புகார், பல மாத காலமாகப் பிரதமர் காதில் விழாமல் போனது ஏன்?" என்று கேள்வி எழுப்புங்கள்.

**நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!**

பா.ஜ.க.வின் கடந்த காலத் தவறுகளை சமூக வலைதளங்களில் திரும்பத் திரும்ப நினைவூட்டி பிரச்சாரம் செய்யுங்கள். இதைச் சரியாக செய்தாலே, நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!

இந்த 'செப்டம்பர் - திராவிட மாதம்', தலைவர் கலைஞரின் நூற்றாண்டில் வந்திருக்கிறது. கலைஞரின் உடன்பிறப்புகளாக, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து, இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம். அடுத்த 'செப்டம்பர் - திராவிட மாத'த்தை, 'வெற்றி விழாக் கொண்டாட்ட மாத'மாகக் கொண்டாடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து

# மாவட்ட, மாநகரச் செயலாளர்/பொறுப்பாளர் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கவனத்திற்கு...

## தலைமைக் கழக அறிவிப்பு

1-1-2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர,04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 27-10-2023 |
| 2. | பெயர்களைச் சேர்க்க/நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் | 27-10-2023 முதல் 09-12-2023 வரை |
| 3. | சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் | 04, 05-11-2023 18, 19-11-2023 |
| 4. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 01-01-2024 |

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தப் பணி குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை தலைமைக் கழகத்துக்கு அவ்வப்போது கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018,
நாள்: 30-09-2023.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட பெரம்பூர், காமராஜ் நகரில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், மக்கள் மருத்துவ சேவை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் (பொ) சங்களால் குமாவத், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) தா. இளையஅருணா, நிலைக்குழுத் தலைவர் (வரி விதிப்பு (ம) நிதி) திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன். துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), தண்டையார்பேட்டை மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் அவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர், நேற்று – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் நெம்மேலியில் அமைக்கப்பட்டுவரும், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் நிறைவு கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இவ்வாய்வின்போது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், தலைமைப் பொறியாளர் ஆர்.கந்தசாமி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர் அண்ணா கிராமம் முரசொலி முகவர் என். பலராமன் உடல் நலக் குறைவினால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளார். அவரை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தனர். உடன் அண்ணா கிராமம் ஒன்றிய செயலாளர் செயற்குழு உறுப்பினர் வி. கே. வெங்கட்ராமன், மாவட்ட துணை செயலாளர் ஆர்.எஸ்.எம். தணிகை செல்வம் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி:

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு – மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், அக்.01-

கடலூர் கிழக்கு மாட்டத்திலுள்ள கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10. 2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19,11,2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 27.10.2023 பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்ககால அவகாசம் -27.10.2023 முதல் 09.12.2023 வரை.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11. 2023 மற்றும் 18, 19.11.2023

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 01.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சி மன்ற, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நிய மிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பி ட்டுள்ளார்.

### ஆற்காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# பி.என்.சுப்பிரமணியன் 8ஆம் ஆண்டு நினைவேந்தல்!



ஆற்காடு, அக்.01-

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகரக் கழக அவைத் தலைவர் பி.என்.எஸ். இராஜசேகரன், இராணிப்பேட்டை மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் பி.என்.எஸ். சரவணன் ஆகியோரின் தந்தையும் ஆற்காடு நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவரும், வேலூர் மாவட்ட முன்னாள் பொருளாளரும், தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினரும், ஆற்காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான பி.என். சுப்பிரமணியன் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (1.10.2023-ஞாயிறு) அன்னாரது இல்லத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

அன்னாரது நினைவு நாளில் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.




ஜமீன் பல்லாவரத்தில் உள்ள தாம்பரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு ரஷ்யா விண்வெளி மையத்தை பார்வையிட நிதியுதவி கிடைக்க பெற்ற நிலையில் இரண்டு மாணவர்களுக்கு நிதி இல்லாததால் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டபோது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி . ரூபாய் 4 லட்சம் நிதி உதவி வழங்கி ரஷ்ய விண்வெளி மையத்தைப் பார்வையிட முதல் கட்டமாக 50மாணவ மாணவிகள் மற்றும் 10ஆசிரியர்களுக்கு நேற்று இரவு சென்னை விமான நிலயத்தில் மாணவ மாணவிகளுக்கு பூங்கொத்து கொடுத்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பள்ளி தலைமையாசிரியர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் உடன் இருந்தனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு – மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்தன் வரவேற்பில்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் - ஊரெங்கும் பனை விதை நடுதல்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கின்றனர்.

காஞ்சிபுரம், அக். 1-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பாக இயற்கை செழிக்கவும் இயற்கை பாதுகாக்கவும் ஊரெங்கும் பனைமரத் திருவிழா நமது தமிழகத்தின் தேசிய மரமான பனை விதைகளை முதல் கட்டமாக 25 ஆயிரம் பண விதைகளை விதைப்பது என முடிவெடுக்கப்பட்டு முதல் நிகழ்ச்சியாக இன்று (1. 10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு கொளுத்துவாஞ்சேரி, நடுங்குளம், அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் கே. ஆர். ஆனந்தன் வரவேற்பில், மாவட்ட துணை அமைப்பாளர் குன்றத்தூர் டி.எம். உமாசங்கர் தலைமையில் நடைபெறுகிறது. இதனை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளருமான தா.மோ. அன்பரசன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக மௌலிவாக்கம், ஐயப்பன் தாங்கல், ஸ்ரீபெரும்புதூர், மூவரசம்பட்டு, ஆதம்பாக்கம், செங்கல்பட்டு, அனகாபுத்தூர், ஆலப்பாக்கம், நெடுங்குன்றம், நங்கநல்லூர், ஆலந்தூர், குன்றத்தூர் ஆகிய 10 இடங்களில் ஊரெங்கும் பனைமரத் திருவிழா நடைபெறுகிறது.

அய்யப்பன்தாங்கல் ஊராட்சி மன்ற தலைவர் ஜெமிலா பாண்டுரங்கன், ஒன்றிய கவுன்சிலர் லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினிஎத்திராஜ், கு.ப.முருகன், பி.பிரசாத், ஜா. முனிரத்னம், கே.ஜி.சந்தோஷ்கண்ணன், ஆராஜன், ஆர்.பெருமாள், சி.வாசிம் ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் ஊரெங்கும் பனைவிதை நடும் விழாவை துவக்கி வைக்கின்றனர்.

இதில் மாவட்ட ஒன்றியக் குழுத் தலைவர் படப்பை மனோகரன், ஒன்றியச் செயலாளர் வந்தே மாதவரம், குன்றத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம், நகர்மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, நகரச்செயலாளர் ஜபருல்லா, கே.எத்திராஜ், சாய் ஜெய்காந்த், தி.க.பாஸ்கரன், ஜெயபாலன், டி.பி. செந்தில்குமார், டி.ஆர். சாரதி, ப.குமரவேல், தா. அன்பழகன், தமிழரசி சுரேஷ், D.திருநாவுக்கரசு, என்.குணசேகர், கே.கே.ராசமாணிக்கம், சுலைமான்சையத், க.வே.சிதம்பரம், ஜெ. மணிமாறன், டி.வி.சரவணன், மரு.ஜி.பாபு, ஆர். கே.சையத்யூசப், தீனதயாளன், ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன்.ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.ராஜாதேசிங்கு, எஸ்.கே.துளசிங்கம், எஸ். சந்தானம், பா.ராஜேந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சி.பாண்டியன், கே. சுதாகரன், அண்ணம்மாள் மோகன், கௌரி தாமோதரன், திவ்யா சத்தியநாதன், உமா சத்தியமூர்த்தி, பா. சுதாகர், கே.அரசு, எஸ். பாண்டியன், சாந்தாதேவி சுகுமார், எஸ்.ஜனார்த்தனன், ரா.நவீன்ராஜ், வெ. கவிபாரதி, கு.பிரவீன்குமார், கு.தமிழ்வாணன், பி.கதிர வன், ர.பாபு, வெ. வசந்தகுமார், து.நாராயணன், பா.மகேஸ்வரன், ரா.அரிபிரபு, ராசாமணி சகாதேவன், கமாட்சிபாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதாசத்யபிரியா உள்ளிட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக முன்னணியினர் கலந்து கொள்கின்றனர்.

சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ப.டேனியல் சந்துரு நன்றி கூறுகிறார்.

### தமிழ்நாடு முழுவதும் – பள்ளி மாணவ-மாணவியர் – கலைஞரின் கவிதைகள் – திரைப்பட வசனங்கள் ஒப்பிக்கும் போட்டி!

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் – கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாவட்டம் வாரியாக நடைபெறும் விபரம்! வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

சென்னை, அக்.01-

கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும், மாவட்டந்தோறும், பள்ளி மாணவ, மாணவியருக்கான - கலைஞரின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்பிக்கும் போட்டிகள் நடைபெறுகின்றன எனவும், அணியின் மாநிலச் செயலாளர்களும், மாநில துணைச் செயலாளர்களும், மாவட்ட வாரியாகச் சென்று அப்பணியினைச் செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனவும், கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

பள்ளி மாணவ-மாணவியருக்கான தலைவர் கலைஞர் அவர்களின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பிக்கும் போட்டியில் - பேரவையின் மாநிலச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் பொறுப்பு ஏற்கும் மாவட்டங்கள் விவரம் வருமாறு:-

**மாநிலச் செயலாளர்**
**பொள்ளாச்சி மா.உமாபதி**

கோவை மாநகர், கோவை வடக்கு, கோவை தெற்கு, நீலகிரி, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு.

**மாநில துணைச் செயலாளர்**
**மீனா ஜெயக்குமார்**

சேலம் வடக்கு, சேலம் தெற்கு, சேலம் மத்தி

**மாநிலச் செயலாளர்**
**அர.திருவிடம் (திருவாரூர்)**

நாகை, மயிலாடுதுறை, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்தி, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு.

**மாநிலச் செயலாளர்**
**இறையன்பன் குத்தூஸ்**
**துணைச் செயலாளர்**
**கவிஞர் நன்மாறன்**

சென்னை கிழக்கு, சென்னை மேற்கு,சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்தி, காஞ்சி வடக்கு, காஞ்சி தெற்கு, விழுப்புரம்.

**மாநிலச் செயலாளர்**
**வண்ணை அரங்கநாதன்**

திருச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர், கரூர், சிவகங்கை, இராமநாதபுரம்.

**மாநிலச் செயலாளர்**
**தில்லை செல்வம்**

கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி தெற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு.

**மாநில துணைச் செயலாளர்**
**மதுரை சி.வீரகணேசன்**

மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், திண்டுக்கல் கிழக்கு,

திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு.

**மாநிலத் துணைச் செயலாளர்**
**எழில்மாறன்**

திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு.

**மாநிலத் துணைச் செயலாளர்**
**கே.வி.குப்பம் சி.கோபி**

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி வடக்கு, கிருஷ்ணகிரி தெற்கு, தர்மபுரி வடக்கு, தர்மபுரி தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். சுப்பிரமணியன்
**அக்டோபர் 1 (2015)**



1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.

25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் - தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில்

# ஒரு கோடி பனை விதைகளை விதைக்கும் திட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, அக்.01-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் முன்னெடுக்கப்படும் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் ஒரு கோடி பனை விதைகளை விதைக்கும் திட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன் என இத்திட்டத்தையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பராமரிப்பில்லாமலே காலத்துக்கும் பயன்தரும் மரமான பனை மரம் தமிழர்களின் வாழ்வியலோடு நெருங்கிய உறவுடையது. நம் மொழியின் அரிய இலக்கியங்களும் சுவடிகள் மூலமே பல நூற்றாண்டுகள் கடத்தப்பட்டன. நுங்கு, பதநீர், பனை மட்டை, நார், ஓலை, வெல்லம், கருப்பட்டி, பனங்கற்கண்டு எனப் பனையின் பயன்கள் எண்ணிலடங்கா. தமிழ்நாட்டின் மாநில மரமாகவும் பனைமரமே விளங்குகிறது.

ஆட்சிக்கு வந்ததும் வேளாண் துறைக்கெனத் தனி நிதிநிலை தாக்கல்செய்து வரலாறு படைத்த நமது கழக அரசு பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கவும், பனை நடுவதை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2021-22 வேளாண் நிதிநிலை அறிக்கையில் பனை மேம்பாட்டு இயக்கம் என்ற பெயரில் தனி இயக்கமே அறிவிக்கப்பட்டு, 30 மாவட்டங்களில் 76 இலட்சம் பனை விதைகளும் 1 இலட்சம் பனங்கன்றுகளும் முழு மானியத்தில் வழங்கப்பட்டது. 2022-23 வேளாண் நிதிநிலை அறிக்கையின்படி 2.02 கோடி ரூபாயில் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டது.

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க 10 இலட்சம் பனைவிதைகள் 30 இலட்சம் ரூபாயில் வழங்கப்பட்டதோடு, கூடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் 62 இலட்சம் ரூபாயில் 124 இடங்களில் மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் அமைத்தல், 20.40 இலட்சம் ரூபாயில் மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிப்பதற்கான கருவிகள் வழங்குதல், 45 இலட்சம் ரூபாய் நிதியில் 1000 பேருக்கு பனைமரம் ஏறுவதற்கான கருவிகள் வழங்குதல், 43.32 இலட்சம் ரூபாய் நிதியில் பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் சார்பில் பனைவெல்லம், பனங்கற்கண்டு, பிற பனைசார் பொருட்களைத் தூய்மையான முறையில் தயாரிப்பதற்கான பயிற்சி மற்றும் மகளிருக்குப் பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

நடப்பாண்டில் (2023-24), 12 ஆயிரம் பனைவிதைகள் விநியோகம், 7,500 பனங்கன்றுகள் விநியோகம், 116 மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் அமைத்தல், 1000 பனை ஏறும் கருவிகள் வழங்குதல், பனைசார் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி வழங்குதல் உள்ளிட்டவை 2 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கெல்லாம் மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் ஒரு கோடி பனை விதைகளை விதைக்கும் திட்டத்தைத் 'தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்' 01.10.2023 அன்று தொடங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் இந்த வாரியம் அமைக்கப்பட்டு, அதன் தலைவராக இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டு 2011-ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இவ்வாரியம் க்ரீன் நீடோ சுற்றுச்சூழலமைப்பு, மாநில நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபடுகிறது. மேலும், சென்னை ஐ.ஐ.டி., டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், இராணி மேரி கல்லூரி உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் உள்ளிட்ட ஒரு இலட்சம் தன்னார்வலர்களும் இணைந்து ஒரு கோடி பனை விதைகளை நடும் திட்டத்தை வெற்றிபெறச் செய்யவுள்ளார்கள் என்பது நெஞ்சுக்கு இதமளிக்கிறது.

தமிழ்ச் சமூகத்துக்கு வாழ்நாள் எல்லாம் பல வகையிலும் பல துறையிலும் பயனளித்திட்ட தமிழினத் தலைவர் நூற்றாண்டில் முன்னெடுக்கப்படும் இந்த சீரிய முயற்சி வெற்றி அடைய வாழ்த்துகிறேன். இதற்காக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களையும், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் ஆ.நாராயணன் அவர்களையும் பாராட்டுகிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பேருந்து பள்ளத்தில் விழுந்து ஏற்பட்ட

# விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.01-**

**நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பேருந்து பள்ளத்தில் விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக, முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-

தென்காசி மாவட்டத்திலிருந்து உதகமண்டலத்திற்கு தனியார் பேருந்து மூலம் சுற்றுலாவிற்கு சென்றவர்கள் இன்று (30.9.2023) தென்காசிக்கு திரும்பும் வழியில், சுற்றுலாப் பேருந்து நீலகிரி மாவட்டம், குன்னூர், பர்லியாறு அருகே வந்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக பள்ளத்தில் விழுந்த ஏற்பட்ட விபத்தில் பேருந்தில் பயணம் செய்த திருமதி.முப்புடாதி (வயது 67), முருகேசன் (வயது 65), இளங்கோ (வயது 64), திருமதி.தேவிகலா (வயது 42), திருமதி.கௌசல்யா (வயது 29) மற்றும் செல்வன். நிதின் (வயது 15) ஆகியோர் உள்ளிட்ட எட்டு பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்களை விபத்து நடந்த இடத்தில் நடைபெற்றுவரும் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்தவும், மேலும் இவ்விபத்தில் படுகாயம் மற்றும் லேசான காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சிறப்பு சிகிச்சை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகம் மேற்குப் பகுதி துணைச் செயலாளர் - 59வது வார்டு மாமன்ற உறுப்பினர் - மறைந்த

# திருமதி கே.சரஸ்வதி திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

*சென்னை, அக்.01-*

சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் மேற்குப் பகுதிக் கழக துணைச் செயலாளரும், 59-வது வார்டு மாமன்ற உறுப்பினருமான - மறைந்த திருமதி. கே.சரஸ்வதியின் திருவுருவப்படத் திறப்பு நிகழ்ச்சி நாளை (2.10.2023-திங்கட்கிழமை மாலை 7.00 மணியளவில், எண்.110/38, பங்காரு நாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி எனும் முகவரியில் நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சிக்கு - 59 (அ) வட்டச் செயலாளர் சேப்பாக்கம் வே.பா. பிரபாகரன், 59-வது வட்டச் செயலாளர் டி.சதீஷ்குமார் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ். இராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் - சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டு திருமதி கே.சரஸ்வதி எம்.சி.யின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து. இரங்கலுரையாற்றுகின்றனர்.

மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் எஸ். மதன் மோகன் எம்.சி. உள்ளிட்ட முன்னணியினரும் கலந்துகொள்கின்றனர்.



நீலகிரி மாவட்டம், கூடலூர், தேவர் சோலை சாலையில் உள்ள (என்.எஸ்.கேப்) கால்பந்து விளையாட்டு மைதானத்தில், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, முன்னிலையில் தொடங்கி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது குதரதுல்லா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.தேவகுமாரி உட்பட பலர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்

பொறுப்புகளுக்கான நேர்காணல்

இளைஞர் அணி செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம் 3, மண்டலம் 4 மற்றும் மண்டலம் 5–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

காஞ்சிபுரம் தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 03.10.2023 செவ்வாய்கிழமையும், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 04.10.2023 புதன்கிழமையும், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டக் கழகங்களுக்கு 05.10.2023 வியாழக்கிழமையும், தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு 06.10.2023 வெள்ளிக்கிழமையும் நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மண்டலம்–3

**நேர்காணல் தேதி : 03.10.2023,**
**அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் தெற்கு | காலை 9.00 மணி |
| 2 | காஞ்சிபுரம் வடக்கு | மதியம் 12.00 மணி |

**நேர்காணல் தேதி : 04.10.2023,**
**ஆண்டாள் சிங்கார வேலு திருமண மண்டபம்,**
**வேலூர் ரோடு, வேங்கிக்கால், திருவண்ணாமலை**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | திருப்பத்தூர் | காலை 9.00 மணி |
| 2 | திருவண்ணாமலை வடக்கு | காலை 11.00 மணி |
| 3 | திருவண்ணாமலை தெற்கு | மதியம் 2.00 மணி |

**நேர்காணல் தேதி : 05.10.2023,**
**வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகம்,**
**ஹோட்டல் ரிவர்யூ அருகில், வேலூர்**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | காலை 9.00 மணி |
| 2 | வேலூர் | மதியம் 12.00 மணி |

### மண்டலம்–4

**நேர்காணல் தேதி : 06.10.2023,**
**வன்னியர் குல மண்டபம்,**
**தெற்கு ரயில்வே லைன் சாலை, தருமபுரி-3**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | தருமபுரி மேற்கு | மதியம் 2.00 மணி |
| 2 | தருமபுரி கிழக்கு | மதியம் 3.00 மணி |

### மண்டலம்–5

**நேர்காணல் தேதி : 06.10.2023,**
**லட்சுமி மஹால், சேலம் பைபாஸ் சாலை,**
**உமாராணி மருத்துவமனை அருகில், கிருஷ்ணகிரி.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி மேற்கு | காலை 9.00 மணி |
| 2 | கிருஷ்ணகிரி கிழக்கு | காலை 10.00 மணி |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 30–09–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

ரூ.2.90 கோடி மதிப்பில் - தண்டையார்பேட்டை மண்டலம் - பெரம்பூர் காமராஜ் நகரில்

# புதிதாகக் கட்டப்பட்ட - நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

*சென்னை, அக்.1-*

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று, பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார் பேட்டை மண்டலம், வார்டு 44, பெரம்பூர், காமராஜ் நகர், 2ஆவது தெருவில் தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்ட நிதியின் கீழ், ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு தளங்களுடன் கூடிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மக்கள் மருத்துவ சேவை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பெரம்பூர் காமராஜ் நகரில் ரூ.2.90 கோடி மதிப்பில் ஆரம்ப சுகாதார மைய நிலையம் கட்டி முடித்து திறக்கப்பட்டுள்ளது. தரைத் தளம் மற்றும் முதல் தளம் தலா 4040 சதுர அடி பரப்பளவில் என இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார மையத்தினை பெரும்பாலான மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை அளிக்கும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயல்படும். இந்த மருத்துவமனைக்கு மேலும் கூடுதலாக மருத்துவ வசதிகள் செய்து தர கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை செய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் 426 நபர்கள் பாதிப்படைந்தனர். இந்த ஆண்டில் இதுவரை 346 நபர்கள் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழையின் காரணமாக தாமதப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளை ஒருவார காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆறுகள், கால்வாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெருமழை பெய்தாலும் மக்களை பாதிக்காத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு வழங்கிய அறிவுரையின் அடிப்படையில் பருவ மழைக்கு முன்னதாக சாலைப் பணிகள் மற்றும் சாலை சீரமைக்கும் பணிகள் தரமாகவும், விரைவாகவும் நடைபெற்று வருகின்றன. மாநகராட்சிப் பகுதியில் சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில், மின்துறை உள்ளிட்ட பல்வேறு சேவைத் துறையிலும் பணிகள் நடைபெற்று வருவதையொட்டி அத்துறைகளை ஒருங்கிணைத்து சாலை அமைக்கும் பணிகள் விரைவாக முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பருவ மழையினை முன்னிட்டு எவ்வித சாலை வெட்டுக்களும் சேவைத் துறைகளால் மேற்கொள்ள கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின்கீழ் 150 எம்.எல்.டி. குடிநீர் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனை நேற்று அலவலர்களுடன் நேரடியாக களஆய்வு மேற்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப் படும். செம்பரம்பாக்கம் உள்ளிட்ட அனைத்து ஏரிகளிலும் போதுமான அளவிற்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. எனவே, சென்னைக்கு குடிநீர் பற்றாக்குறை ஏதும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், வார்டு3, கத்திவாக்கம் இரயில் நிலைய சாலை (மேற்கு), எண்ணூர் துறைமுகம் அனல் மின் நிலையப் பகுதியில் தமிழ்நாடு அரசு மற்றும் காமராஜர் துறைமுகத்தின் பங்களிப்புடன் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 48 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைகளுடன் கூடிய சென்னை தொடக்கப்பள்ளி கட்டடத்தினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு இனிப்புகளையும், உணவினையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், கே.பி. சங்கர், எஸ். சுதர்சனம், துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் (பொ) சங்கர்லால் குமாவத், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், நிலைக் குழுத் தலைவர்கள் தா.இளைய அருணா (நகரமைப்பு), டாக்டர் கோ.சாந்தகுமாரி, த.விஸ்வநாதன், திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன், துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், ஷேக் அப்துல் ரகுமான், மண்டலக்குழுத் தலைவர்கள் நேதாஜி யு.கணேசன், தி.மு.தனியரசு, மண்டல அலுவலர் எஸ்.ராதாகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட இரா.கி.பேட்டை ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் சி.என். சண்முகம் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் விழா நடைபெற்றது இதில். திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல.ஏ அம்மையார்குப்பத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து ஒன்றியத்தில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்திற்கு நேரில் சென்று இரு வண்ணக் கொடியினை ஏற்றினார். அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.பழனி, பி.டி.சந்திரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ரஞ்சிதா ஆபாவாணன், ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் அனிதா செங்குட்டுவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பள்ளிப்பட்டு முரளி சேனா, மற்றும் கே.எம்.எஸ்.சுப்பிரமணி, சிவகுமார், உமாபதி, செல்வி, சந்தோஷ், கணேசன், கே.பி.மணி, கே.சீராளன், பன்னீர்செல்வம், திருஞாணம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, செங்கல்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நேற்று மேற்கு தாம்பரம் வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு 100க்கும் மேற்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், ஆணையர் (வேலைவாய்ப்பு மற்றும் பயற்சிதுறை) கிண்டி கொ.வீர.ராகவ ராவ், மேயர் திருமதி.க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ச.ஜெய பிரதிப் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்!



## அக்டோபர் (2023) மாத நிகழ்வுகள்

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

| நாள் / நேரம்: 01/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** பொறியியல் கல்லூரிகளில் தலைவர் கலைஞர் பிறந்த நாள் நிகழ்வை பேச்சுப்போட்டி மற்றும் கருத்தரங்கம் நடத்தி, தலைவர் கலைஞர் எழுதிய புத்தகம் பரிசளித்தல் | **தலைமை :** எம்.ஜியாவுதீன் (மாவட்ட அமைப்பாளர்), சி.எம்.மெய்யப்பன் (மாநகர அமைப்பாளர்) |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** மாவட்ட, மாநகர பொறியாளர் அணி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** கு.கருணாநிதி (மாநில பொறியாளர் அணி செயலாளர்) கருத்தரங்கில் கவிஞர் நந்தலாலா உரையாற்றுகின்றார் |

| நாள் / நேரம்: 07/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** கே.என்.சண்முகம், என்.தங்கவேலு |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 16,16A அரியமங்கலம் பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** பொன்னேரி சிவா, தலைமை கழக பேச்சாளர் |

| நாள் / நேரம்: 08/10/2023 – மாலை 5.30 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** ஆர்.சேகர், கே.என்.நலங்கிள்ளி |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 30,30A பாலக்கரை பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** சைதை சாதிக், தலைமை கழக பேச்சாளர் |

| நாள் / நேரம்: 14/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா | **தலைமை :** மாவட்ட கழக செயலாளர் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | **சிறப்பு அழைப்பாளர்கள் :** க. துரை முருகன், (கழக பொதுச்செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர்) 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்) |

| நாள் / நேரம்: 15/10/2023 – காலை 10 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞர் அவர்களின், திரைக்கதை வசனத்தில் உருவான திரைப்படத்தை திரையிடுதல் மற்றும் தலைவர் கலைஞர் எழுதிய திரை வசனங்களை ஒப்புவித்தல் மற்றும் கலைஞர் எழுதிய கவிதை ஒப்புவித்தல் போட்டிகள் | **நிகழ்ச்சி ஏற்பாடு :** மாவட்ட, மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை |
| | **தலைமை :** எஸ்.வி.ராஜ்குமார், மாவட்ட அமைப்பாளர். டி.செந்தில், மாநகர அமைப்பாளர் |
| | **சிறப்பு அழைப்பாளர்கள் :** வாகை.சந்திரசேகர், மாநில கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் |

| நாள் / நேரம்: 15/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | **தலைமை :** ஓ.நீலமேகம் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** காட்டூர் பகுதி கழகம் | **சிறப்பு அழைப்பாளர்கள் :** ஐ.பெரியசாமி, கழக துணை பொது செயலாளர் / உள்ளாட்சி துறை அமைச்சர் |

| நாள் / நேரம்: 21/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** இ.பரமசிவம், கே.முருகன் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 46,46A, பொன்மலை பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** எழும்பூர் கோபி, தலைமை கழக பேச்சாளர் |

| நாள் / நேரம்: 22/10/2023 – காலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள்:** மணப்பாறை ஒன்றியம் 14 ஊராட்சிகளிலும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா | **நிகழ்ச்சி ஏற்பாடு :** மணப்பாறை ஒன்றிய கழகம் |
| | **தலைமை :** தலைமை சி.ராமசாமி, ஒன்றிய செயலாளர் |
| | **சிறப்பு அழைப்பாளர்கள் :** மாவட்ட கழக செயலாளர் |

| நாள் / நேரம்: 22/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | **தலைமை :** மு.ம.செல்வம், நகர செயலாளர் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** மணப்பாறை நகரம் | **சிறப்பு அழைப்பாளர்கள் :** எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத்துறை அமைச்சர் / அரியலூர் மாவட்ட கழக செயலாளர் |

| நாள் / நேரம்: 28/10/2023 – மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** பி.முருகானந்தம், சிவசக்தி.கே.கார்த்திக் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 43,43A, காட்டூர் பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** நெல்லிக்குப்பம் புகழேந்தி, தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


# கலையுலகக் குரிசிலே; காலத்தின் பரிசிலே; நிலையுலகம் வாழ்கவே; நெடும்புகழ் வளர்கவே!



பேராசிரியர்
**மா.செல்வராசன்**

சின்னய்யா கணேசன்நீ
சிவாஜி கணேசனெனப்
பின்னாளில் பேர்பெற்றாய்;
பெரும்புகழ் நேருற்றாய்!
நன்னாளது, அண்ணாவின்
நாடகத்தில் மராட்டியமா
மன்னனாம் சிவாஜி
மாவீரன் வேடத்தில்
நன்நூறு பக்கத்து
நற்றமிழ் உரையாடல்
பன்நூறு கருத்துகள்
பளிச்சிடப் பேசியே
முன்னவரும் காட்டாத
முழுநடிப்புத் திறங்காட்டத்
தன்மானத் தந்தையார்
தமிழ்ப் பெரியார் வியந்துபோய்
இன்றுமுதல் சிவாஜிநீ
என்றியம்பப் பெரியார்சொல்
நன்றாகப் பலித்தது;
நாடெங்கும் ஒலித்தது!
நின்றது; நிலைத்தது;
நெடும்புகழ் நிறைத்தது!

அண்ணாவின் அருள்பெற்றோர்
அத்தனை பேர்களும்
எண்ணாத உயரத்தை
எட்டியே உயர்கின்றார்!
அண்ணாவின் நாடகத்தில்
அன்றுநீ நடித்ததனால்
நண்ணினாய் நற்பெயர்;
நாடகம்போய்த் திரைப்படத்தில்
விண்ணளாவ உயர்ந்துவிட்டாய்;
விரிகதிராய் ஒளிர்கின்றாய்!

மண்ணாளும் உரிமையில்லை;
மணிமகுடம் சூடலில்லை;
எந்நாளும் சூத்திரன்
ஆளுதற்கு இடமில்லை;
ஒண்ணாது சாத்திரம்;
ஒப்பாது சூத்திரம்;
பண்ணாத இடையூறு
பரப்பிய ஆரிய
உண்ணோக்கச் சூழ்ச்சியை
உடைத்தெறிந்து ஆட்சியில்
திண்மையாய் அமர்ந்த பெருந்
திராவிட சிவாஜியை
அண்ணா படைத்திட
அதற்குநீ உயிர்கொடுத்தாய்!

பராசக்தி, திரையுலகப்
பாதையைத் திறந்தது;
வராசக்தி வந்தது;
வல்லமை வளர்ந்தது!
திராவிடக் கலைஞர்தான்
தீட்டிய உரையாடல்
பராசக்தி கல்;அது
பேசாது எனப்பகர்ந்த
சிராய்ப்பிலா உன்பேச்சு
செந்தழல் பொன்வீச்சு!
பராவிற்று நாடெலாம்;
பாய்அரிமாப் பீடெலாம்
விராவிய தெங்கெங்கும்;
விடிந்தது கங்குலெங்கும்!
பராபரமே என்றிருந்தோர்
பகுத்தறிவு வெளிச்சந்தான்
சரேலெனப் பாய்ந்திடத்
தன்மானம் ஒளிர்ந்தது!

கலையுலகம் உன்னிரு
கால்களும் பட்டபின்தான்
நிலையுயர்ந்து நின்றது;
நெடும்பழமை அகன்றது;
மலையுயர்ந்து நிற்பதுபோல்
வான்பரந்து செல்வதுபோல்
அலைகடல் ஆழ்வதுபோல்
அனற்கதிர் ஒளிர்வதுபோல்
நிலம்பொழில் செழிப்பதுபோல்
நீர்,காற்று உலவுதல்போல்
தலைநிமிர்ந்து எழுந்தது;
தமிழ்த்திரை உயர்ந்தது!

ஒன்பதுமெய்ப் பாடுகள்
உரைக்கும்தொல் காப்பியம்!
ஒன்பதும் உன் நடிப்பிலே
உருவேற்றி உணர்த்தினாய்;
ஒன்பதுக்கு மேலுந்தான்
உண்டெனின் அவற்றையும்
நன்றாக உளப்படுத்தி
நயமாக வெளிப்படுத்தி
பொன்றாத நிலையிலே
பொலிகின்ற தோன்றலே!
என்றுமே இலகிடும்
நடிகருள் திலகமே!

இன்றுனது நடிப்பினை
எடுத்தாய்ந்து பார்த்தாலோ
ஒன்றாகப் பத்தாக
ஒருநூறும் ஆயிரமாய்க்
குன்றாத இலக்கமாய்க்
கோடியாய்ப் பெருகியே
நின்றோங்கி மேலெழும்;
நிலைத்திடும்உன்
கலைத்திறன்!

திருப்பூர்க் குமரனாய்,
செக்கிழுத்த சிதம்பரனாய்,
துரத்தவே வெள்ளையரைத்
தூக்குற்ற பொம்மனாய்,
அரட்டலுக்கு அஞ்சாத
அடலேறு மனோகரனாய்,
உருட்டலுக்குப் பணியாத
உத்தம புத்திரனாய்,
திரும்பிப்பார் வில்லனாய்,
தில்லானா மோகனாம்பாள்
விரும்பிடும் கலைஞனாய்,
வியட்நாம்வீடு அய்யராய்,
அருவிபோல் பேசிடும்
அழகான இராசாவாய்
உருகியே வாழ்ந்திடும்
ஓர்உயர்ந்த மனிதனாய், அரும்பி
டும் காதலின்
அழகழகு நாயகராய்,
திருவருட் செல்வராய்,
செவ்வேளாய், புலவராய்,
திருவிளையாடல் சிவனாய்,
சிரிப்பூட்டும் நகையனாய்,
பரதனாய், திருமாலாய்,
பாரதியாய், கர்ணனாய்,
திரிசூலம் தெய்வமகன்
திகழ்கின்ற மூவராய்,
ஒருபடத்தில் ஒன்பது வேடங்கொள்
உருவனாய்,
இருவருள்ளம் புழுங்கிடும்
இதயமுள்ள கணவனாய்,
அரங்கனாய்,பாசமலர்
அண்ணனாய், பாவரிசைச்
சுரங்கமாய்ப் பற்பல
தோற்றங்கள் பூண்டநீ
விரிவாக எத்தனையோ
வியத்தகு மாந்தர்கள்
அரிதான உன்நடிப்பால்
அமரதீபம் போல்முதல்
மரியாதை பெற்றிங்கு
மக்களுளம் இருக்கவிட்டாய்!

ஒவ்வொரு மாந்தரும்
உயிருடன் உலவுகிற
அவ்வொரு மாண்பினை
அளித்த உன் ஆற்றலை,
செவ்விய பெருந்திறனைச்
செய்ய ஒரு நடிகர்தான்
இவ்வுலகில் பிறக்கவில்லை
இதுவரையில்! இனிமேலும்
எவ்வித வாய்ப்புமில்லை;
என்றென்றும் வாய்மையிது!

திரையுலகில் உனைவீழ்த்தத்
திட்டமிட்டோர் வெல்லவில்லை;
இரையாக்க முயன்றவர்கள்
இரண்டகம் செல்லவில்லை;
உரையாடல் உனைப்போல
ஒருவரும் சொல்லவில்லை;
அரைத்தமாவை
அரைத்துவாய்
அவலாக மெல்லவில்லை!

கரைமீறிப் பெருகுகிற
காவிரிபோல் நடிப்பிலே
வரையாக உயர்ந்தவன்நீ;
வானாகப் பரந்தவன்நீ;
திரைகடலாய் ஆழ்ந்தவன்நீ;
தீயாக வளர்ந்தவன்நீ;
விரைகாற்றாய் எழுந்தவன்நீ;
விண்கதிராய் ஒளிர்ந்தவன்நீ;
நுரைநிலவாய்க்
குளிர்ந்தவன்நீ;
நூறாக மலர்ந்தவன்நீ;
நரைகாணாத துன்நடிப்பு!
நாயகனே, நற்றவனே!

பகுத்தறிவுக்கு ஒவ்வாத
பழம்புராணப் படங்களோ
மிகுதியில்லை என்றாலும்
மேன்மையாம்உன்
நடிப்பாலே
அகத்தினைக் கவர்கின்றாய்;
ஆட்கொண்டு திகழ்கின்றாய்;
முகத்திலே ஆயிரமாய்
முகிழ்த்திடும் உணர்ச்சிகளை
இகத்திலே இன்னொருவர்
என்னதான் முயன்றாலும்
நிகழ்த்தவே முடியாது;
நினைக்கவும் இயலாது!
வகைவகையாய் எத்தனையோ
வண்ணநடை நடந்துநீ
திகைப்பளித்தாய்; நடிகரெலாம்
திருவடிகள் வாழ்கவென்றார்!

வாடிய பயிர்கண்டு
வாடிய வள்ளலார்போல்
தேடியே சென்றுநீ
செய்தவை எவ்வளவோ!
நாடியே வந்தவர்க்கு
நல்கியவை எவ்வளவோ!
ஆடியே நாடகங்கள்
அளித்தவை எவ்வளவோ!
நீடிய வாழ்விலே
நீட்டியவை எவ்வளவோ!
கோடிகள் கொடுத்தும்நீ
கூறாமல் விட்டதனால்
பேடிகள் பிதற்றுகின்றார்
பெருங்கருமி நீயென்று!

வள்ளுவர்க்குச் சிலைவைக்க
வாரியே வழங்கியவன்;
பள்ளிகளில் மாணவர்கள்
பகலுணவுக்கு ஓரிலக்கம்;
வெள்ளங்கள் வரும்போதுன்
வீடுபெரும் உணவகம்;
எல்லையிலே போரெழ
எடுத்தளித்த கொடையுளம்;
இல்லையில்லை என்னாமல்
ஈந்தாலும் கைக்கூலிச்
சில்லரைகள் கருமியெனத்
திட்டமிட்டே பரப்பினும்
கள்ளமே அறியாத
கைக்குழந்தை போலவே
உள்ளமுனக்கு உயர்ந்ததனால்
உதறியே நடந்தவன்நீ!

சூழ்ச்சியினை அறியாத
தூயவன்நீ, ஏனோஓர்
ஆழ்கடல் அரசியல்
ஆகாதென்று அறியாமல்
தாழ்ச்சியினைக் கண்டாலும்
தளராமல் என்றுமே
நீழலாய்ப் பலருக்கும்
நெடுங்காலம் இருந்தவன்நீ!
சூழ்ந்தவரே உனக்கெதிராய்ச்
சூதுகள் செய்ததனால்
வீழ்ந்தாலும் நீயொரு
வெண்தந்த வேழந்தான்!
ஆழ்ந்துதான் பார்த்தாலோ
அரசியலில் சென்ற இடம்
மூழ்குகின்ற கப்பலென
முடிவிலும் உணரவில்லை;
வாழ்ந்திருக்க வேண்டுமிடம்
வஞ்சகத்தால் விட்டுவிட்டாய்!

தாழ்ந்தாலும் மேன்மக்கள்
தந்நிகர் அற்றவரே!
காய்ந்தாலும் மலையென்றும்
கருகித்தான் போவதில்லை;
சாய்ந்தாலும் கோபுரம்
சன்னதி வீழ்வதில்லை;
தீய்ந்தாலும் பொன்னென்றும்
செப்பாக ஆவதில்லை;
தேய்ந்தாலும் வெண்ணிலா
திரும்ப ஒளி திகழுமன்றோ!
ஓய்ந்திடாமல் எப்போதும்
உருவெடுக்கும் சிவாஜிநீ
ஆய்ந்தாலோ என்றுமே
ஆதவன் அல்லவோ!

சிலையுனக்குக் கடற்கரையில்
சிறப்பாக நிறுவிய
கலைஞருடன் வளர்ந்தவன்நீ;
கடைசிவரை உயிர்நண்பன்!
புலையர்தாம் உன்சிலையைப்
போயகற்றிப் புன்மைசெயத்
தலைவருளம் குளிரவே
தளபதிதான் மீண்டுமுன்
சிலையினை எல்லோரும்
சீராகக் காணவே
நிலையாக நல்லிடத்தில்
நிறுவியே நடிப்பெனும்
கலைமகன், தலைமகன்
காண்கென வாழ்த்துகின்றார்!

கலைக்கொரு பல்கலைக்
கழகம்நீ! என்றாலோ
மலைப்பவர் யாருமில்லை;
மகிழாத பேருமில்லை!
தலைக்கொரு தோற்றத்தைத்
தந்துன்றன் நடிப்பாலே
நிலைக்குப் பலபாவம்
நீர்மையாய்க் காட்டிடும்
கலையுலகக் குரிசில்நீ!
காலத்தின்
பரிசில்நீ!
அலைஅலையாய்ப்
பிறந்தநாள்
அடுத்தடுத்துப் பெருகியே
நிலையாக வாழ்கவே;
நீடுபுகழ் வளர்கவே!




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (30.09.2023) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர்களைச் சந்தித்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கா.மு.இஸ்மாயில் தலைமை! படப்பை ஆ.மனோகரன் - பட்டூர் எஸ்.ஜபருல்லா பங்கேற்பு!

# மாங்காடு நகரத்தில் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - போடி காமராஜ் சிறப்புரை!

காஞ்சிபுரம், அக்.01-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகரம் - 13வது வார்டு கழகம் சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் இன்று (1.10.2023-ஞாயிறு) மாலை 5.30 மணியளவில் மாங்காடு சையத் சாதிக் நகரில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு வார்டு செயலாளர் சா.மு.இஸ்மாயில் தலைமை வகிக்கிறார். மாவட்டப் பிரதிநிதி ஜி.ராமு வரவேற்புரையாற்றுகிறார்.

சரிதா ஞானவேல், ராம்பியாரி லட்சுமணன், ஏ.இலியாஸ், எஸ்.லதா, வி.வள்ளி, பி.முருகையன், எஸ்.ராஜசேகர், ஆர்.சரவணன், எஸ். ஸ்ரீதேவி சத்யா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் போடி காமராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன், நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, எம்.ஆர்.சீனிவாசன், ஆர். பாஸ்கரன், ஏ.கே.அப்துல் ரஹ்மான், எம்.ஆர்.வெங்கடேசன், எம்.எஸ்.மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ், சுசீலா இராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், எம்.எஸ்.கதிரவன், ஆர்.சாரதி, டி.பெருமாள்ராஜ், க.ராஜேஷ், ஜி. ஞானவேல், யு.செல்வராஜ், எஸ்.நளினி, சாந்தி சம்பத், சரளா விஜயகுமார், சி.தனசேகர், மேனகா கணபதி, சரஸ்வதி சீனிவாசன், அனுசுயா சத்தியசீலன், மோசினா அபிபுர் ரஹ்மான், யாஸ்மின் ஜபருல்லா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

எஸ்.அக்ரம், ஆர்.ஷமீம் அஹமது ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா: செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரியில்

# சென்னை மண்டல சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்! என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை!

செங்கல்பட்டு, அக்.01-

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைப் படி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத் துறை சார்பில் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரியில் கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் நேற்று நடைபெற்ற சென்னை மண்டலத்திற்குட்பட்ட சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.

தலைவர் கலைஞர் அவர்களின் சரித்திரப் பணிகளை இளைய தலைமுறையினர் அறிந்துக்கொள்ளும் வகையில் 5 தலைப்புகளில் நடைபெற்ற மண்டல அளவிலான போட்டியின் இறுதியில் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிக்கு தேர்வாகியுள்ள மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் KJ சரவணன், பா. கணேசன், கவி. கணேசன், மறைமலை ஆகியோர் கலந்து கொண்டனர்

இப்போட்டிக்கு நடுவர்களாக - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், வழக்கறிஞர் நன்மாறன், மூத்த வழக்கறிஞர் ஷாஜகான், திருமுருகன் ஆகியோர் இருந்து பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுத்தனர்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அணி அமைப்பாளர் N. கனகராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள் துரைகண்ணன் தேவேந்திரன் , கணேஷ் பாண்டியன் , காணிக்கை நாதன் , லக்ஷ்மிகாந்தன் , ரமேஷ் , மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

இதில் மாணவ- மாணவியருக்கு கீழ்க்கண்ட தலைப்புகளில் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டது.

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி
2. கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி
3. கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்
4. கலைஞரின் பார்வையில் தொழில்வளம்
5. கலைஞரின் பார்வையில் கல்வி

இப்போட்டியில் முதல் பரிசு வென்ற செங்கல்பட்டு சட்டக் கல்லூரி மாணவி பிரியதர்ஷினிக்கு ரூபாய் 50,000 சான்றிதழ் மற்றும் தங்கப்பதக்கமும்,

இரண்டாம் பரிசு வென்ற செங்கல்பட்டு சட்டக்கல்லூரி மாணவர் தனுஷ்ராமிற்கு ரூபாய் 25 ஆயிரம், சான்றிதழ் மற்றும் வெள்ளி பதக்கமும்,

மூன்றாம் பரிசு வென்ற பிரிஸ்ட் சட்டக்கல்லூரி மாணவர் முகமதுவிற்கு ரூபாய் 15,000, சான்றிதழ் மற்றும் வெண்கல பதக்கமும் , சிறப்பு ஆறுதல் பரிசு பெற்ற எம். ஜி. ஆர் பல்கலைக்கழக சட்டக்கல்லூரி மாணவர் ஜெயசூர்யா மற்றும் பட்டறை பெரும்புதூர் டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவி செண்பகவடிவு ஆகியோருக்கு ரூபாய் ஐந்தாயிரம், சான்றிதழ் மற்றும் செம்பு பதக்கமும் வழங்கப்பட்டது.

### ஜி.ஏ.ராயப்பன் - பொன்.ரமேஷ் தலைமையில்

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் பூத் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், அக்.1

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் பூத் வாரியாகக் கழகச் செயல் வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆணைக்கிணங்க, மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் ஜி.ஏ.ராயப்பன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் அமரமேடு பொன்.ரமேஷ் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

வடமங்கலம், திருமங்கலம், கண்டிகை உள்ள 52, 49, 50, 51 ஆகிய பூத்துகளுக்கு பி.ஏ.கலைமோகன், இ.முனிகிருஷ்ணன், கே.நரேஷ்குமார், எஸ்.ராஜேஷ், எஸ். அமீர்பாய், எம்.காசி, ஜலால் பாய் ஆகியோர் பொறுப்பாளர்களாகவும்,

வேளாங்கன்னிநகர், சித்தூர், சந்தவேலூர் உள்ள 43, 42, 40, 41 ஆகிய பூத்துகளுக்கு இ.கோதண்டம், என்.சத்யா, ஏ.நாசர், எஸ்.வேண்டாமணி, மகாலட்சுமி ஜெயக்குமார், சி.பழனி, பி.கங்காதரன், எஸ்.மோகன், எஸ். சங்கர், பி.ஆர்.பாண்டியன் ஆகியோர் பொறுப்பாளர்கள் ஆகவும் செயல்படுவர்.

செல்லம்பட்டிடை 8, 9 ஆகிய பூத்துகளுக்கு சி.வேலுமணி, பி.பழனி, பி.சந்தானராஜ், பி.ஜோசப்ராஜ் ஆகியோரும், கோட்டூர் 11 வது பூத்துக்கு ஆர்.பிரகாசம், எம். ஜெயராமன், கே.வெங்கடேசன், கே.முருகையன் ஆகியோரும், எடையார்பாக்கம் 10 வது பூத்துக்கு எம்.சின்னக்கண்ணு, குணகரம்பாக்கம் 12, 13 பூத்துகளுக்கு ஜே.சிவாபாதம், கே.பழனி, டி. வெங்கடேசன், எல்.கிருபானந்தன், ஆர்.கோகுல் ஆகியோரும், மேல்மதுரமங்கலம் 23 வது பூத்துக்கு இ.முரளியும், இரானுஜபுரம் 24 வது பூத்துக்கு வி.சரவணன், எம். ஆறுமுகம், சங்கீதா ராமு, கே.தமிழரசன், ஏ.பெருமாள், எஸ்.சேட்டு ஆகியோரும் பூத்துகளில் பொறுப்பாளர்களாக செயல்படுவர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பி.எல்.ஏ.2 முகவர்கள், வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், அணிகளின் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தின் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

### குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில்

# வாக்குச்சாவடி வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், அக்.01-

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ. மனோகரன் அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகளில் பாகவாரியாக கழக செயல்வீரர்கள் கூட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள கழகப் பிரதிநிதிகளான தலைமை கழக பொது உறுப்பினர் மா. கணேஷ்பாபு, வி.ஹரி, பொன். ரமேஷ் கவி, நந்தம்பாக்கம் அமரம்பேடு ஆகிய ஊராட்சிக்குட்ப்பட்ட பாகம் எண் 103 முதல் 117 வரையிலும்,

மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஜா.செந்தில்தேவராஜ், சி.பாலகிருஷ்ணன், எம்.பரிமேலழகன் ஆகியோர் சிறுகளத்தூர் மற்றும் மலையம்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட பாகம் எண் 118 முதல் 132 வரையிலும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராமமூர்த்தி அவர்களும் திருமதி.வாசுகிமகேஷ், மா.சே.பிரகாஷ், இ. பாலாஜி ஆகியோர் கொல்லச்சேரி ஊராட்சி, கொழுமணிவாக்கம் ஊராட்சிக்குட்பட்ட பாகம் எண் 133 முதல் 179 வரையிலும், மாவட்ட கழகப் பிரதிநிதி ச. வேலுமணி அவர்கள் க.ஏழுமலை, பொன்.இளையபாரதி, சி. பார்த்திபன் ஆகியோர் திருமுடிவாக்கம், பழந்தண்டலம், எருமையூர், பூந்தண்ட லம் ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பாகம் எண்: 222 முதல் 237 வரையிலும்,

எல்.டி.ஜார்ஜ், இ.மணி, எஸ்.வைரம், ஜி.ஏ.ராயப்பன் சோமங்கலம், மலைப்பட்டு, சேத்துப்பட்டு, நடுவீரப்பட்டு ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பாகம் எண் 238 முதல் 247 வரையிலும் மேற்பார்வையாக கலந்து கொண்டு நடைபெற உள்ள வாக்குச்சாவடி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (01.10.2023) நடைபெற இருப்பதால் கழக நிர்வாகிகளோடு ஆலோசித்து சம்பந்தப்பட்ட பாகத்தில் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உடன் கழக தோழர்களுக்கு தகவல் தெரிவித்து சிறப்பான முறையில் கூட்டத்தினை நடத்திட வேண்டுமாயும் அனைவரையும் நடத்திட வேண்டுமாய் ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் பேரூர் கழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனைப்படி பாகம் எண் 125 வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம் திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர் தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்பு செழியன் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் எஸ்.அஸ்கர் அலி பரசுராமன், மு.க.ரவி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பி.சுரேஷ் மற்றும் வார்டு செயலாளர் டி.எம்.பாபு, வி.பத்மநாபன் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தாயுமானவராக இருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

நேரான மரங்களே முதலில்
வெட்டப்படுகின்றன என்ற போதும்
பயன்படுகிறோம் என்ற உணர்வில்
சூரியனை நோக்கிய பயணப் பாதையை
மாற்றிக்கொள்வதில்லை
மரங்கள்!

நேர்மையானவர்களே
குறிவைக்கப்படுகிறார்கள் என்று
சாணக்கியன் சொன்னதைக் கேட்டு
அதிகார உச்சியில் இருப்பவர்கள்
அச்சுறுத்துகிற போதும் வளைந்து கொடுக்காமல்
வரலாறாய் வாழ நினைக்கிறார்கள்
இப்போதும் சிலர்!

காவிரிநீர்ப் பிரச்சினை போல
ஆண்டுக்கொரு முறை பிள்ளையார் சதுர்த்தி!
மலைக்கோட்டை உச்சியில்
பிள்ளையார் இருந்தபோதும்
அங்குள்ள நவக்கிரகங்கள் என்னவோ
சூரியனையே பார்த்துக்கொண்டிருக்கின்றன!

இந்தியா விடுதலை பெறத்
திலகர் கொண்டாடிய தேசியத் திருவிழா!

சுதந்திரத்தை மீட்க
இந்தியா போராடும் காலத்திலும்
பிள்ளையார் சதுர்த்தி!

இனி பிள்ளையார் சதுர்த்தி போல
ஒரே நேரத்தில் இந்தியா முழுதும்
ஒரே தேர்தலாம்!

ஐந்துநாள் கொண்டாட்டம் முடிந்து
தாரை தப்பாட்டம் அடித்து முழக்கிய
பட்டாசு வெடித்து ஆட்ட ஊர்வலம் நடத்தி
நீரில் கரைக்கிறார்கள் பிள்ளையார் சிலைகளை!

இதோ ஐந்தாண்டு முடியப்போகிறது?
தொடங்கிவிட்டது தேர்தல் கொண்டாட்டம்!

கரையப் போவதும் நிலைக்கப் போவதும்
மக்கள் கையில்!
தாமே உருவாக்கிக்
குழந்தைகளோடு வீட்டில் கொண்டாடிய
பிள்ளையாரைக் காணவில்லை.

வண்ணங்களில் 70 அடி உயரங்களில்
தெருவை அடைத்துப்
பந்தல் போட்டுக் கூட்டம் கூட்டும்
விளம்பர வெளிச்சச் சூட்டில்
கார்ப்பரேட் நிறுவனப் பிள்ளையார் சிலைகள்!

பெண் பாதியாக மாதொரு பாகர்
பாதி மிருகமாக நரசிங்கப் பெருமாள்!
முகம் பெண்ணாகக் காமதேனு என்று
மன வெளிச்சப்பாடுகளில் கடவுள்களின்
படைப்புகள்!

ஆனைமுகம் எலி வாகனம் தொப்பை வயிறு
கொழுக்கட்டை, சுண்டல் என்று
குழந்தைகள் முதல் முதியவர் வரை
இரசிக்கும் படைப்பில் பிள்ளையார்!
பெண்ணாகவும் பார்த்திருக்கிறது செங்கல்பட்டு.

வாதாபிப் பிள்ளையாருக்குத்
தமிழகக் கோயில்களில் முதல் மரியாதை!
திருச்சி மலைக்கோட்டையில்
உச்சிப் பிள்ளையார்!

உலகின் தொன்மையான பாறைகளுள் ஒன்று
மலைக்கோட்டை!

பல்லவர் காலம் முதல் அண்மைக்காலம் வரை
போர்க்களக் கோட்டை!
ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் நடந்த
பலசாலி யுத்தத்தில் தூக்கி எறியப்பட்ட
மேரு மலையின் சிறு துண்டு என்றும்
இராமரின் முடிசூட்டு விழாவுக்குச்
சென்று திரும்பிய விபீடணன் கையில்
பரிசுப்பொருளாக இருந்த அரங்கநாதரைத்
தரையில் வைக்கக் கூடாது என்பதால்
கையிலேயே வைத்திருந்த களைப்பு நீங்க
ஒரு சிறுவன் கையில் கொடுத்துக்
காவிரிக்கரையில் விபீடணன் ஓய்வெடுக்க
வாங்கிய சிறுவன் வைத்துவிட்டு
ஓடிப்போன இடம் திருவரங்கமாம்!

ஓடிப்போனவனைத் தேடிப்பிடித்து
தலையில் குட்டிய இடம் மலைக்கோட்டையாம்!
குட்டுப்பட்ட வீக்கம் குறையாமல்
இப்போதும் அங்கு பிள்ளையார் சிலையாம்!

மேலே இருந்து பார்த்தால்
படிக்கட்டுகள் தும்பிக்கை போலக்
கிழக்கிலிருந்து பார்த்தால்
பிள்ளையார் சிலை போல
வடக்கிலிருந்து பார்த்தால்
ஆடும் மயில் போலத்
தென் கைலாயமாக மலைக்கோட்டையாம்!

உச்சியில் பிள்ளையார் நடுவில் தாயுமானவர்!
கரைக்கப்படுவது என்னவோ
பிள்ளையார் சிலைகள்தாம்.

தனது மகளின் மகப்பேறு காலத்தில்
தாய் உடன் இருக்க விடாமல்
காவிரியில் வெள்ளமாம்.
பேறுவலி தாங்காமல் காவிரியின் மறுகரையில்
மகளின் கதறல்!
தாய் போல உதவிக்கு வந்தவர்
தாயுமானவர் ஆகியிருக்கிறார்.

உச்சியில் பிள்ளையார் இருந்தாலும்
குட்டு வாங்கியவரை
வேடிக்கை பார்க்கப் போகிறவர்கள்
வழியில் தாயும் ஆனவரைக்
கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்!

மகளிருக்கு உரிமைத் தொகை!

அதிகாரம் அடையாளம் இல்லை
பண்புதான் அடையாளம் என்று
என்ன நடந்தாலும் எதுவத்தாலும்
எதிர்கொள்ளும் மனநிலையை
வளர்த்தெடுக்கும் வாழ்க்கைத் துணைக்கு -
சுதந்திரத்தை ஊட்டி வளர்க்கும்
தாய்க்குலத்திற்குத் தேவைப்படுவது முதலில்
உரிமை பிறகு தொகை.

மகளிருக்கு உரிமை
கிடைக்கும் தொகையாலும் உறுதிப்படும் என்பதால்
அறிவித்திருக்கிறார் தாயுள்ளத்தோடு
முதலமைச்சர்!

உச்சிப் பிள்ளையாராக
ஒன்றிய அரசு இருந்தபோதும்
தாயுமானவராக இருக்கிறார்.
தமிழ்நாடு முதல்வர்!



ம.ரா.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயல்வீரர் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நாளை (2-10-2023 திங்கள் கிழமை) மாலை 4:00 மணிக்கு திருவள்ளூரை அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் உள்ள ஆர்.எம்.கே கெஸ்ட் ஹௌசில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

மேலும் இக்கூட்டத்தில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.. கே.ஜே.ரமேஷ், சி.ஜெரால்டு. பிரபு கஜேந்திரன், வி.ஜெ.சீனிவாசன். எஸ்.ஜெயபாலன், திருமதி. காயத்ரி ஸ்ரீதரன், பா.நரேஷ் குமார் த.எத்திராஜ் ஜி.ராஜேந்திரன் கு.விமல்வர்ஷன். எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

ஆர். ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றுகிறார். இந்நிகழ்ச்சியில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: கழக தலைவர். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையில் இன்று 01-10-2023 நடைபெறும் தி.மு.க அனைத்து மாவட்ட செயலாளர்கள் கூட்டம் தீர்மானம் பணிகள்

சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாடு குறித்து வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் பணிகள் வாக்காளர் சரிபார்க்கும் பணிகள் கழக ஆக்க பணிகள்

**ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் நேற்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ.சரவணன், பா. கணேசன், கவி. கணேசன், மறைமலை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை யொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அளவிலான

# முதல்வர் கோப்பை வில்வித்தை விளையாட்டுப் போட்டி!

## டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன் - தயாநிதி மாறன் எம்.பி. பரிசு வழங்குகிறார்கள்!

காஞ்சிபுரம், அக்.1-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை யொட்டி மாவட்ட அளவிலான முதல்வர் கோப்பை வில்வித்தை விளையாட்டு போட்டி செங்கல்பட்டில் இன்று நடைபெறுகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் பரிசுகளை வழங்குகிறார்கள்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை யொட்டி முதல்வர் கோப்பை மாவட்ட அளவிலான மாபெரும் வில்வித்தை போட்டி இன்று 1.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள தூய கொலம்பா மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் தினேஷ் கந்தசாமி தலைமையிலும், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி.ஆர்.சாரதி பெரியநாயகம் அனைவரையும் வரவேற்புரையிலும் நடைபெறுகிறது.

செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் ம.ரேவதி, க.செந்தில் குமார், விக்னேஷ் காளிதாஸ், சுகுணா கலைவாணன், சி.ரஞ்சித், என்.என். கதிரவன் ஆகியோர் முன்னிலையில் இப்போட்டி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு, எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், மாண்புமிகு குறு - சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், எம்.பி., ஆகியோர் கலந்துக்கொண்டு வில்வித்தை விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்துரை வழங்குவார்கள்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் து. மூர்த்தி, பொருளாளர் வெ. விசுவநாதன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, க.அன்புச்செல்வன், ஜி.சி.அன்புச்செழியன், ஆதிமாரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், செங்கல்பட்டு நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் உறுப்பினர்கள், பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொள்கிறார்கள். இறுதியாக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் த.பிரேம் பாலாஜி நன்றி கூறுகிறார்.

முதல்வர் கோப்பைக்கான பரிசுத் தொகையாக ரூ.1,45,000 அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்று – தமிழ்நாடு முழுவதும் – 1000 இடங்களில்

# டெங்கு - மழைக்கால நோய்த்தடுப்பு - காய்ச்சல் மருத்துவ முகாம்!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, அக்.1-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் இன்று (01.10.2023) 1000 இடங்களில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான சிறப்பு காய்ச்சல் மருத்துவ முகாம்கள் நடைபெறும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது:

தமிழகத்தில் டெங்கு மற்றும் மழைக்கால தொற்று நோய்களான வயிற்றுப் போக்கு, டைபாய்டு போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற தொடர் நடவடிக்கைகளின் காரணமாக தமிழகத்தில் தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப் பட்டு வருகிறது. தமிழகத்தில் 2,972 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, கிராமம் மற்றும் நகரங்கள் வாரியாக பட்டியல் தயார் செய்து அந்தந்த மாவட்டங்களுக்கு நோய்த் தடுப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 23,717 தினசரி தற்காலிக பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தென்மேற்கு பருவமழைக் காரணமாக டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாவதால் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட அளவில் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சுகாதாரத் துறை நடவடிக்கைகள்**

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்குத் தேவையான உயிர்காக்கும் மருந்துகள், இரத்த அணுக்கள் பரிசோதனை கருவிகள், இரத்த கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவை போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது சுகாதாரத் துறையோடு இணைந்து உள்ளாட்சி அமைப்புகள், டயர் பிளாஸ்டிக் கப்புகள், தேங்காய் சிரட்டை போன்ற தேவையற்ற கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். பொது கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள், உணவகங்கள், பூங்காக்கள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவற்றை அகற்றும் பணிகளும் நடைபெற்று வருகின்றது.

இந்திய மருத்துவ முறை மருந்துகளான நிலவேம்பு குடிநீர் மற்றும் பப்பாளி இலைச்சாறு போன்றவை தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வழங்கப் பட்டு வருகின்றது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், டெங்குவிற்கென்று தனி வார்டு இயங்கி வருகிறது, தேவைக்கேற்ப கூடுதலாக விரிவுபடுத்தப்படும். கிராமங்கள் தோறும் துப்புரவுப் பணிகள் செயல்படுத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது. மழைக் காலங்களில் கொசு புழுக்கள், நீர்த் தேக்கங்களில் உற்பத்தியாகி டெங்கு, மலேரியா நோய்கள் பரவாமல் இருக்க கொசு புழு உற்பத்தியாகும் இடங்களை அடியோடு அகற்றிடவும், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கும் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டினை பொறுத்தவரை கடந்த ஆண்டு அதாவது 2022 ஆம் ஆண்டு 2,65,834 டெங்கு மாதிரிகள் எடுக்கப்பட்டது, அதில் 6,430 நபர்களுக்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டது. இந்தாண்டு (2023) இதுவரை 2,42,743 டெங்கு மாதிரிகள் எடுக்கப் பட்டுள்ளது. இதில் 4,524 நபர்களுக்கு டெங்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும், கொசு உற்பத்தியை தடுக்க 16,005 புகை அடிக்கும் இயந்திரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளான பைரித்திரம் 65,769 லிட்டர், மாலத்தியான் 12,493 லிட்டர், டெமிபாஸ் 48,122 லிட்டர் கையிருப்பில் உள்ளது.

**சென்னையில்**
**டெங்கு தடுப்பு நிலவரம்**

சென்னை மாநகரில் டெங்குக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள சுமார் 17 இலட்சம் வீடுகளின் பகுதிகளை சிறு வட்டங்களாக (Sector) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டத்திற்கும் சுமார் 500 வீடுகள் கொண்ட தெருக்களில் வாரந்தோறும் கொசு புழு வளரிடங்களான மேல் நிலை/கீழ்நிலைத் தொட்டி, கிணறு, தேவையற்ற பொருட்கள் (டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குடங்கள் போன்றவைகளை கண்டறிந்து கொசு புழுக்கள் இருப்பின் அழித்து வருகின்றனர். டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்காக 318 மருத்துவ அலுவலர்கள், 635 செவிலியர்கள், 954 கொசு ஒழிப்புக்கென நிரந்தர கொசு ஒழிப்பு பணியாளர்கள், 2,324 ஒப்பந்த பணியாளர்கள் என ஆக மொத்தம் 4,231 மருத்துவ பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், 424 மருந்து தெளிப்பான்கள், 120 பவர் ஸ்ப்ரேயர்கள், 300 பேட்டரி மூலம் இயங்கும் ஸ்ப்ரேயர்கள், 324 கை புகைப்பரப்பும் இயந்திரம், 1 சிறிய புகைப்பரப்பும் இயந்திரம், 68 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளது. மருந்துகளை பொருத்தவரை 29.05 டன் ப்ளீச்சிங் பவுடர், 1795.6 லிட்டர் பைரித்ரம், 1 லிட்டர் டெக்னிக்கல் மாலத்தியான், 2,287.4 லிட்டர் டெமிபோஸ், 33,963 லிட்டர் எம்.எல்.ஓ கையிருப்பில் உள்ளது.

**டெங்கு பற்றி கடந்த கால ஒப்பீடு**

தமிழ்நாட்டில் அதிக டெங்கு பாதிப்பை பொறுத்தவரை, 2012 ஆம் ஆண்டு மட்டும் 13,204 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டு, 66 பேர் உயிரிழந்தனர். அதிகபட்ச டெங்கு பாதிப்பு என்பது 2017ஆம் ஆண்டு 23,294 பேர் டெங்கு பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்த வகையில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு பாதிப்புகள் அப்போது இருந்தன. எனவே தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஆண்டு சுகாதாரத்துறை, நகராட்சித்துறை, ஊரக உள்ளாட்சித் துறையும் இணைந்து டெங்கு பாதிப்பு குறித்து கூட்டம் நடத்தப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டும் நமது தலைமைச் செயலாளர் அவர்களும் பல்வேறு துறை செயலாளர்கள் தலைமையில் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் வைப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து மருத்துவத் துறையின் சார்பிலும் மாநில அளவிலான கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் என்று 500க்கும் மேற்பட்ட சுகாதார உயரலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப் பட்டது. அந்த கூட்டத்தில் டெங்கு பாதிப்பு குறித்தும், டெங்கு விழிப்புணர்வு குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுடனான கூட்டத்தில் டெங்கு பாதிப்பு குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் இத்துறை செயலாளர் அவர்களும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் வாயிலாக டெங்கு பாதிப்பு தடுப்பது தொடர்பான ஆலோசனைகள் வழங்கியுள்ளார். நேற்று தூத்துக்குடி, மதுரை மற்றும் விளாத்திக்குளம் அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தேன். இப்படி தொடர்ச்சியாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசு சார்பிலும், மருத்துவத் துறையின் சார்பிலும் எடுக்கப் பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு முழுவதும் டெங்குவினால் பாதிக்கப் பட்டு சிகிச்சை பெறுபவர்கள் 363 பேர் (Active cases) இதில், சென்னையில் மட்டும் 54 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நாளை (அதவாது இன்று) தமிழ்நாட்டில் ஒரே நாளில் 1000 காய்ச்சல் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவுள்ளது. சென்னையில் நாளை காலை 9.00 மணிக்கு மயிலாப்பூர் சீனிவாசபுரம் பகுதியில் நடைபெறும் முகாமை நானும் துறையின் செயலாளர் அவர்களும் தொடங்கி வைக்கவுள்ளோம். தொடர்ந்து இது போன்ற மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் அடுத்த குட்டியாங்குப்பத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி பழனிச்சாமியின் கூரை வீடு தீ பற்றி எரிந்து சாம்பலானது. இதில் சுமார் 5 லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாயின. இத்தகவல் அறிந்த கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆலோசனைபடி, சம்பவ இடத்திற்கு நேரில் சென்று அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி 25 ஆயிரம் உதவித்தொகை, மளிகைப் பொருட்கள், ஆடைகள், நிவாரணப் பொருட்கள் வழங்கினார். இதில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கே.வி.ஆர்.ராதாகிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் முத்துகுமாரசாமி, ஞானப்பிரகாசம், கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், நிர்வாகிகள் சேகர், அய்யப்பன், அழகர், இளங்கோவன், ராம்குமார், பிரகாஷ், அமரன் உள்பட பலர் உள்ளனர்.




01.10.2023
8-ஆம் ஆண்டு நினைவேந்தல்



ஆற்காடு நகரக் கழக செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.
மு.வேலூர் மாவட்டப்பொருளாளர், மு.தணிக்கைக்குழு உறுப்பினர்
மு.ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்

P.N.சுப்பிரமணியன் Ex.MLA.,

கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண்ணியம் மாறாமல் வாழ்ந்துகாட்டி, கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தாய்! என்றும் நீங்கள் வகுத்துத்தந்த கழகப்பாதையில் தடம்மாறாது எங்கள் பயணம் தொடரும்.

என்றும் உங்களது நீங்காத நினைவுகளை சுமந்து

P.N.S.இராஜசேகரன்
நகர அவைத்தலைவர்
மு.நகர செயலாளர்-ஆற்காடு

Dr.P.N.S.சரவணன் M.B.B.S.,M.S.,F.A.I.S.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்,
இராணிப்பேட்டை

Dr.S.பவளக்கொடி சரவணன் B.D.S.,
ஆற்காடு நகரமன்ற துணைத்தலைவர், ஆற்காடு நகராட்சி
மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவி, இராணிப்பேட்டை

மற்றும் குடும்பத்தினர்கள் ஆற்காடு நகரம், இராணிப்பேட்டை மாவட்டம்




ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதியில் உள்ள டி.யூ.சி.எஸ். மண்டபத்தில் சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம் நடைபெற்றது. இதில் புதிய இளைஞரணி உறுப்பினர்களுக்கு அட்டைகளை சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆ. இம்ரான் அருண், என் மோகன் வேல், கே.குட்டி, வி.தினேஷ்குமார், பி.பாலசந்தர் மற்றும் மாவட்ட,பகுதி நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர், இளைஞர் அணி தோழர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா தொடர் 100 நிகழ்ச்சிகள்!



## இரண்டாம் கட்டமாக – அக்டோபர் 4 முதல் ஜனவரி 10 (2024) வரை 40 தொடர் நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



தமிழர் நலத்திற்கும், திராவிட மேன்மைக்கும், மனித முன்னேற்றத்திற்கும் ஓயாது உழைத்த உன்னதத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆண்டு முழுவதும்கொண்டாடப்படும் தொடர் நிகழ்ச்சிகளின் இரண்டாம் கட்டமாக அக்டோபர் 04.2023 முதல் ஜனவரி10.2024 வரை 40 நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வரலாற்று தலைவருக்காக எடுக்கப்படும் இந்நிகழ்ச்சிகளில் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

### கலைஞர் 100 – 41

**திருநாட்டின் அரும் தலைவர்**
**திசை மாற்றிய திரைக்கலைஞர்**

நாள்: 04.10.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: ஸ்வாதி மகால், கொரட்டூர் தலைமை: M.T.R. நாகராஜ் (அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர்)

வாழ்த்துரைப்போர்:
பேராசிரியர் - **ஜெ. ஜெயரஞ்சன்**
திரைக்கலைஞர் - **கோவை.சரளா**
திரைப்பட இயக்குனர் **மிஷ்கின்**
நடிகர். **அஜய் ரத்னம்**

அன்புடன்: 84வது வட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 42

**திருவாரூரின் அறிவுத்தேர்!**
**திசைகளெங்கும் அவரின் பேர்!**

நாள்: 07.10.2023, சனிக்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில், வில்லிவாக்கம்

தலைமை: கூ.பி.ஜெயின், எம்.சி., (வில்லிவாக்கம் மேற்குபகுதி செயலாளர், 8வது மண்டலக்குழுத்தலைவர்)

வாழ்த்துரைப்போர்: திரு.**ஆ.ராசா**,எம்.பி.,
கழக துணைப் பொதுச்செயலாளர்
திரு.**விடுதலை ராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர்
திரு.**கே. கனகராஜ்**, )
மாநில செயற்குழு உறுப்பினர் - சி.பி.எம்)

அன்புடன்:
94வது வட்ட திமுக - வில்லிவாக்கம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 43

**உயிர்காக்க ரத்தம் கொடுப்போம்**
**உடன்பிறப்பாய் எழுந்து நிற்போம்**

நாள்: 08.10.2023, ஞாயிறு, காலை: 9.00 மணி
இடம்: எஸ்.எம்.கே.மகால், பழைய பாங்க் ஆப் பரோடா தெரு, அம்பத்தூர்

தலைமை: Dr.G.சாந்தகுமாரி,MC., (மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்),

இரத்ததான முகாமை துவக்கி வைப்பவர் :
டாக்டர். **மயில்வாகணன்** (M.N.ஆர்த்தோபேடிக் மருத்துவமனை)

அன்புடன்:
மாவட்ட மருத்துவரணி - அம்பத்தூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 44

**நட்சத்திரங்களின் சந்திரன்**
**தமிழ் திரைவானின் சூரியன்**

நாள்: 11.10.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வீராசாமி தெரு எழும்பூர்.

தலைமை: கே.எஸ்.எம்.நாதன் ( தலைமை செயற்குழு உறுப்பினர்)

போற்றுவோர்: நடிகர். **ராஜ்கிரண்**
நடிகர்.**பாண்டியராஜன்**
நடிகை.**ரோகிணி**

அன்புடன்:
61வது வட்ட திமுக - எழும்பூர் தெற்கு பகுதி

### கலைஞர் 100 – 45

**உடல் நலம் பேணுவோம்**
**உதயத்தை காணுவோம்**

நாள்: 13.10.2023, வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: துறைமுகம் சட்டமன்ற தொகுதி,

துறைமுகம் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

**உதயநிதிஸ்டாலின்** அவர்கள்
(இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்)

அன்புடன்:
துறைமுகம் மேற்கு /கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 46

**கலைஞர் கண்டது கல்வி புரட்சி**
**தமிழகம் கண்டது புதிய எழுச்சி**நாள்: 14.10.2023, சனிக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: திருவள்ளுவர் திருமண மாளிகை, பெரியார் நகர்

தலைமை: D.லோகேஷ் (இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்)

மாவட்ட அளவில் நடைபெறும் இளைஞர்களுக்கான பேச்சுப் போட்டியை துவக்கி வைப்பவர்

தங்கம் தென்னரசு (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்)

அன்புடன்:
மாவட்ட இளைஞரணி - கொளத்தூர் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 47

**நெஞ்சுக்கு நீதியின் அரசர்**
**நிலையான புகழான கலைஞர்**

நாள்: 15.10.2023, ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: மகேஷ் மகால், பெரம்பூர் பேரக்ஸ் சாலை

தலைமை: ஜி.தாமோதரன் (மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் )

மாணவ, மாணவியர்களுக்கான கலைஞர் வசனம் ஒப்பித்தல் போட்டியை துவக்கி வைப்பவர்

அமைச்சர் **எஸ்.எஸ்.சிவசங்கர்** (போக்கு வரத்துத்துறை)

அன்புடன்: மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, எழும்பூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 48

**கலைஞர் என்பது அன்பாகும்**
**கருணை அவரின் பண்பாகும்**

நாள்: 18.10.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம்.

தலைமை:மேயர். பிரியாராஜன் (தலைமை செயற்குழு உறுப்பினர் )

வாழ்த்துரைப்போர்: நடிகர்.**விஜயகுமார்**
முனைவர்.**பர்வின் சுல்தானா**
திரைப்பட இயக்குனர்-நடிகர் - **கவிதா பாரதி**
நடிகை.**அறந்தாங்கி நிஷா**

அன்புடன்
:74 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 49

**செந்தமிழ் படைப்பாளி**
**திராவிடப் போராளி**

நாள்: 21.10.2023, சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ஹயாத் மகால், பிராட்வே

தலைமை: N.P.M. ஷேக்அப்துல்லா (மாநில சிறுபான்மையினர் அணி துணை செயலாளர்)

போற்றுவோர்: டாக்டர். **சுதா சேஷய்யன்**
முனைவர்.**ம.ராஜேந்திரன்**
மூத்த பத்திரிக்கையாளர். **பா.கிருஷ்ணன்**
கலையரசி **நடராஜன்**

அன்புடன்: சிறுபான்மையினர் அணி
துறைமுகமம் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 50

**நவீன நாட்டை வரைந்தவர்**
**நடைமுறைபடுத்தி உயர்ந்தவர்**

நாள்: 22.10.2023, ஞாயிறு, காலை: 9.00 மணி, இடம்: சௌந்தரபாண்டியன் நாடார் பள்ளி, அயனாவரம்

தலைமை: வானவில் விஜய் (மாவட்ட மாணவரணி அமைப்பாளர்)

மாணவ, மாணவியர்களுக்கான கட்டுரைப் போட்டியை துவக்கி வைப்பவர்: **சி.வி.எம்.பி.எழிலரசன்**, எம்.எல்.ஏ., (கழக மாணவரணிச் செயலாளர்)

அன்புடன்:
மாவட்ட மாணவரணி – வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 51

**இதயமும் இதயமும் இணையட்டும்**
**எதிர்காலம் கலைஞரை புகழட்டும்**

நாள்: 25.10.2023, புதன்கிழமை, காலை: 8.00 மணி, இடம்: ராஜா அண்ணாமலை மன்றம், பாரிமுனை

தலைமை: எஸ்.முரளி (துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர்)

இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணத்தை நடத்தி வைப்பவர் : **எ.வ.வேலு** அவர்கள்
பொதுப்பணித்துறை அமைச்சர்

அன்புடன்:
59வது வட் திமுக- துறைமுகம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 52

**உடல் குணமாகட்டும்**
**உயிர் நலமாகட்டும்**

நாள்: 27.10.2023, வெள்ளிக்கிழமை, காலை: 9.மணி, இடம்: T.K.A திருமண மாளிகை, வில்லிவாக்கம்

தலைமை: கூ.பி.ஜெயின், (வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளர்,8வது மண்டலக்குழுத்தலைவர்)

வில்லிவாக்கம் தொகுதியில் பணியாற்றும் மாநக ராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

Dr.**மா.மதிவேந்தன்** ( வனத்துறை அமைச்சர்)

அன்புடன்:
94வது வட்ட திமுக - வில்லிவாக்கம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 53

**மாற்றத்தின் நாயகன்**
**வரலாற்றுச் சூரியன்**

நாள்: 28.10.2023, சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்

தலைமை: வே. வாசு (வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் )

வாழ்த்துரைப்போர்: **தொல்.திருமாவளவன்**
(தலைவர் - விடுதலை சிறுத்தைகள் கட்சி)
திரு.**சி.மகேந்திரன்** ( மூத்ததலைவர் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)
திரு. தி.வேல்முருகன் – தலைவர்தமிழகவாழ்வுரிமை கட்சி

அன்புடன்:
96வது வட்ட திமுக - வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 54

**கலைஞர் என்றால் பேரறிவு**
**காலம் தந்த தமிழமுது**

நாள்: 01.11.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ராகவன் தெரு, பெரம்பூர் செம்பியம்

தலைமை: ஐ.சி.எப்.வ.முரளிதரன்
(கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர்)

புகழுரைப்போர்:
திரு. **கே.பாலகிருஷ்ணன்** ( மாநில செயலாளர் -சி.பி. எம்.
திரு.**எம்.எச்.ஜவாஹிருல்லா**, எம்.எல்.ஏ.,
தலைவர் - மனிதநேய மக்கள் கட்சி
திரு.**சபாபதி மோகன்**
கழக கொள்கைப் பரப்பு செயலாளர்

அன்புடன்:
70வது வட்ட திமுக - கொளத்தூர் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 55

**மருத்துவம் செய்வோம்**
**மக்களை மீட்போம்**

நாள்: 03.11.2023 வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: ஜி.கே.எம்.காலனி மைதானம், கொளத்தூர்

தலைமை: சரிதா மகேஷ்குமார், எம்.சி., (பொதுக்குழு உறுப்பினர் - 6வது மண்டலக்குழுத்தலைவர்)

கொளத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

அமைச்சர் **மா.சுப்பிரமணியன்** (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை )

அன்புடன்:
64 அ வட்ட திமுக - கொளத்தூர் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 56

**பேராற்றல் கொண்டவர்**
**பேரன்பால் வென்றவர்**

நாள்: 04.11.2023 சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: OT பேருந்து நிலையம் அருகில், அம்பத்தூர்

தலைமை: பி.கே.மூர்த்தி, எம்.சி., ( தலைமை செயற்குழுஉறுப்பினர்-7வதுமண்டலக்குழுத்தலைவர்)

போற்றுவோர்:
திரு. **ஆர்.எஸ்.பாரதி** - கழக அமைப்பு செயலாளர்
திரு.E.V.K.S. **இளங்கோவன்**, எம்.எல்.ஏ.,
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்
திரு. **நாஞ்சில் சம்பத்**, – திராவிட இயக்க போர் முரசம்

அன்புடன்:
81வது வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 57

**கிழக்கு வானின் சுடரே**
**கேள்வியும் பதிலும் அவரே**

நாள்: 05.11.2023, ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: இராஜராஜேஸ்வரி திருமண மகால், சிட்கோ நகர்

தலைமை: சுதா தீனதயாளன், எம்.சி., (மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்)

மாணவ - மாணவியர்களுக்கான வினாடி வினா போட்டியை துவக்கி வைப்பவர்

திருமதி. **ஹெலன் டேவிட்சன்** ( கழக மகளிர் அணிச் செயலாளர்)

அன்புடன்:
மாவட்ட மகளிர் அணி – வில்லிவாக்கம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 58

**ஏழ்மையை விரட்டியவர்**
**எளிமையை போற்றியவர்**

நாள்: 08.11.2023 புதன்கிழமை, மாலை 6.00 மணி , இடம்: G.K.M. காலனி மைதானம், கொளத்தூர்.

தலைமை: எ. நாகராசன், எம்.சி., (கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர்)

வாழ்த்துரைப்போர்: **இந்து என்.ராம்**
(தி இந்து குழுமம்)
திரு.**எஸ்.பி. முத்துராமன்** – திரைப்பட இயக்குநர்
திரு.**தராசு.ஷியாம்** - தராசு வார இதழ்

அன்புடன்:
69, 69அ வட்ட திமுக - கொளத்தூர் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 59

**புகழில் கலைஞர் முதலிடம்**
**புதுமை அவரிடம் புகலிடம்**

நாள்: 15.11.2023 புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: கேரள சமாஜ் ஆடிட்டோரியம் – பூந்தமல்லி நெடுஞ்சாலை

தலைமை: பரிதி இளம்சுருதி, எம்.சி.,
(கழக அயலக அணி துணைச் செயலாளர்)

புகழுரைப்போர்:
திரு.**கி.வைத்தியநாதன்** - தினமணி ஆசிரியர்
நீதியரசர் **கண்ணதாசன்**
சிற்பி.**பாலசுப்பிரமணியன்** - புகழ்பெற்ற கல்வியாளர்
புலவர். **இரை. சண்முகவடிவேல்** - பட்டிமன்றப் பேச்சாளர்
திரு.**நல்லி குப்புசாமி** செட்டியார்

அன்புடன்:
கழக அயலக அணி - எழும்பூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 60

**வேரானவர் கலைஞர்**
**விழுதானவர் தலைவர்**

நாள்: 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: மாநகராட்சி திடல் – மகாத்மா காந்தி ரோடு, குமரன் நகர்.

தலைமை: நாகவள்ளி பிரபாகரன், எம்.சி., (மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் )

மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைப்பவர்
திரு.**கா.ராமச்சந்திரன்**
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

அன்புடன்: மாவட்டச் சுற்றுச்சூழல் அணி
அம்பத்தூர் தெற்கு பகுதி

### கலைஞர் 100 – 61

**கதை திரைக்கதை வசனம்**
**கலைஞரே என்றைக்கும் சிகரம்**

நாள்: 22.11.2023 புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ஹேம்ராஜ் பவன், ஓட்டேரி

தலைமை:செ.தமிழ்வேந்தன் (திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர்)

வாழ்த்துவோர்:
நடிகர். **கே. பாக்கியராஜ்**,
நடிகை.**குட்டி பத்மினி**
இயக்குநர். **கரு பழனியப்பன்**

அன்புடன்:
71 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 62

**நோயற்ற வாழ்வு! உயிருக்கு உயர்வு!**

நாள்: 24.11.2023 வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி . இடம்: மகாலட்சமி திருமண மண்டபம், ராம் நகர், அம்பத்தூர்

தலைமை: ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ, (அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர்)

அம்பத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாட்கள் முழு உடற்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர்.**கனிமொழி என்.வி.என். சோமு**, எம்.பி.,
கழக மருத்துவரணித்தலைவர் – செய்தி தொடர்பாளர் -திமுக

அன்புடன்:
79 அ வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 63

**முத்துவேலரின் மகனானவர்**
**மூன்றுதமிழின் புகழானவர்**

நாள்: 25.11.2023 சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ரமணன் தெரு, யானைக்கவுனி

தலைமை: பி.ஸ்ரீராமுலு, எம்.சி., (பகுதி பொருளாளர் 5வது மண்டலக்குழு தலைவர்)

போற்றுவோர்:
திரு. **திண்டுக்கல் ஐ.லியோனி** (கழக கொள்கைப் பரப்பு செயலாளர்- தலைவர் தமிழ்நாடு பாடநூல் கழகம்)
திரு. **கவிஞர் மோகனசுந்தரம்** – பட்டிமன்ற பேச்சாளர்
திரு. **விஜய் டி.வி.பழனி** (சின்னத்திரை நடிகர்)

அன்புடன்:
57வது வட்ட திமுக - துறைமுகம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 64

**கலை உலகின் முன்னோடி**
**காலத்தின் கருத்தியல் கண்ணாடி**

நாள்: 29.11.2023 , புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: மோகன் கார்டன், கொரட்டூர், சென்னை76.

தலைமை: D.S.P. ராஜகோபால், எம்.சி., (அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர்)

போற்றுவோர்:

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் - கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா தொடர் 100 நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

திருமதி. **ராதிகா சரத்குமார்**
நடிகர். **சூரி**
நடிகர். **ஸ்ரீமன்**

அன்புடன்:
83வது வட்ட திமுக - அம்பத்தூர் தெற்குகிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 65**

**ஆயுளை மீட்பது மருத்துவம்**
**அறிவினில் கலைஞர் தனித்துவம்**

நாள்: 01.12.2023 , வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: உமா சுராஜ் மகால், அங்காளம்மன் கோயில் தெரு,

தலைமை: சொ. வேலு, எம்.சி., ( எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்)

எழும்பூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர்.**நா.எழிலன்**, எம்.எல்.ஏ., (கழக மருத்துவ ரணிச் செயலாளர்)

அன்புடன்:
78 அ வட்ட திமுக - எழும்பூர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 66**

**போற்றுவோம் கலைஞர் புகழை**
**ஏற்றுவோம் அவரின் சுடரை**

நாள்: 02.12.2023 , சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: மேனாம்பேடு சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை

தலைமை: M.கமல், எம்.சி., (வட்டச் செயலாளர்)

வாழ்த்துரைப்போர்:

திரு. **திருச்சி N. சிவா**, எம்.பி., கழக கொள்கை பரப்பு செயலாளர்

திரு.**சு.வெங்கடேசன் -** மாநில செயற்குழு உறுப்பினர் CPM

அன்புடன்:
86வது வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 67**

**வெற்றியே வீரரின் இலக்கு**
**வழங்கிடும் சூரிய கிழக்கு**

நாள்: 03.12.2023 , ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: பந்தர்கார்டன் பள்ளி மைதானம்

தலைமை: ம. அசோக்குமார் (மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர்)

கிரிக்கெட் போட்டியை துவக்கி வைப்பவர்
திரு.**தயாநிதிமாறன்**, எம்.பி.,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்

அன்புடன்: மாவட்ட விளையாட்டு அணி
கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 68**

**கூடுவோம் திராவிட ஒளியேற்றி!**
**பாடுவோம் கலைஞர் புகழ்போற்றி!**

நாள்: 07.12.2023 வியாழன், மாலை: 6.00 மணி
இடம்: ரமணா நகர், பெரம்பூர், கொளத்தூர் தொகுதி

தலைமை: துரைக்கண்ணன் (வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்)

சின்னத்திரை பிரபலங்களின் இன்னிசை பட்டிமன்றம்

**நடுவர்** : இன்னிசை. சொல்லரசி – கல்பாக்கம் ரேவதி

**தலைப்பு** : முத்தமிழறிஞரின் சீரிய புகழுக்கு அடித்தளமானது அவரது எழுத்தாளுமையா? அவரது சொல்லாளு மையா?

**எழுத்தாளுமையே**
விஜய்டிவி /சன்டிவி புகழ் -திருச்சி அன்னலட்சுமி
சன்டிவி/ஆதித்யா டிவி புகழ்முனைவர் சேலம் அபு

**சொல்லாளுமையே**
விஜய்டிவி புகழ் – கல்பாக்கம் காயத்திரி
விஜய்டிவி/சன்டிவிபுகழ் – கோவில்பட்டி அன்னபாரதி

**இசை** – எழில் ரிதம்ஸ்

அன்புடன்:மாவட்ட வழக்கறிஞர் அணி
கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 69**

**நிலம் போற்றும் முத்தமிழறிஞர்**
**நிதம் போற்றும் தமிழினத் தலைவர்**

நாள்: 09.12.2023 , சனிக்கிழமை, மாலை: 6.00 மணி – இடம்: ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்.

தலைமை: வே. வாசு (வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர்)

போற்றுவோர்

திரு. **இரா. முத்தரசன்** (மாநில செயலாளர் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

திரு.**கே.எம்.காதர் மொய்தீன்**
தலைவர்இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திரு.**பி.வி.கதிரவன்**
மாநில பொதுச்செயலாளர் – இந்திய பார்வர்டு பிளாக்

அன்புடன்:
96வது வட்ட திமுக – வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 70**

**சமூக சமத்துவம் சாதித்தவர்**
**பாலின சமத்துவம் போதித்தவர்**

நாள்: 10.12.2023 , ஞாயிற்றுக்கிழமை, மாலை : 4.00 மணி . இடம்: எஸ்.ஆர்.மகால், ராட்லர்ஸ் ரோடு

தலைமை: ராஜேஸ்வரி ஸ்ரீதர் ( மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்)

திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்

**ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக. ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

(திருகயிலாயப் பரம்பரைத் தருமையாதீனம் 27வது குரு சந்திதானம்)

அன்புடன்: மாவட்ட மகளிர் தொண்டரணி
எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 71**

**கற்றுத் தந்த கலை மேதை**
**கழகம் நடப்பது அவர் பாதை**

நாள்: 13.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: கிருஷ்ணதாஸ் சாலை, ஜமாலியா

தலைமை: பி. உதயசங்கர் (பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்)

திரைப்பிரபலங்கள் பங்கேற்கும் இன்னிசை நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்

திரு.**அர.சக்கரபாணி** (உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

இன்னிசை வழங்குவோர்: M.K.T. ராஜாவின் தீம் திரனா

பாடுவோர்:
**கானாபாலாமாலதி**
**முகேஷ்வேல்முருகன்**

அன்புடன்:
மாவட்ட வர்த்தகர் அணி - 74வது வட்ட திமுக

**கலைஞர் 100 – 72**

**தமிழோவியம் வரைந்த தலைவர்**
**குறளோவியம் புனைந்த கலைஞர்**

நாள்: 16.12.2023 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: தம்பு செட்டி தெரு, மண்ணடி.

தலைமை: எஸ். ராஜசேகர்
துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர்

புகழுரைப்போர்:

திரு.**ஜி.விஸ்வநாதன்** (நிறுவனர் - வி.ஐ.டி. பல்கலைக்கழகம்)

திரு.**ராம.சுப்பிரமணியன் -** அரசியல் விமர்சகர்
திரு.**கவிஞர்.பா.விஜய் -** நடிகர் பாடலாசிரியர்

அன்புடன்:
60. 60அ வட்ட திமுக - துறைமுகம் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 73**

**திராவிட நாட்டின் விளக்கு**
**தென்னாட்டின் கிழக்கு**

நாள்: 20.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: YMCA, ரித்தர்டன் ரோடு

தலைமை: ஆர்.பாபு, வட்டகழக செலாளர்

போற்றுவோர்:
எழுத்தாளர்.**சிவசங்கரி**
எழுத்தாளர். **இந்துமதி**
இயக்குனர். **தங்கர்பச்சான்**

அன்புடன்:
58அ வட்டம் - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 74**

**நோயற்ற சமூகம் வேண்டி நின்றவர்**
**நூறாண்டு கடந்தும் வாழுகின்றவர்**

நாள்: 22.12.2023 , வெள்ளிக்கிழமை, காலை : 9.00 மணி , இடம்: காஸா கிராண்ட் வளாகம்

தலைமை: செ.தமிழ்வேந்தன்
திரு.விக.நகர். வடக்கு பகுதி செயலாளர்

திரு.வி.க.நகர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர் **கலாநிதி வீராசாமி**, எம்.பி
கழக அயலக அணித்தலைவர்

அன்புடன்:
71 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 75**

**இலக்கியம் தந்தவர்**
**இலட்சியம் வென்றவர்**

நாள்: 27.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: வெங்கட்டம்மா சமாதி, சூளை, ஓட்டேரி.

தலைமை: எஸ்.சசிக்குமார் வட்டக் கழக செயலாளர்

போற்றுவோர்: **முனைவர்.க.பொன்முடி**
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்

திரு.**ஈ.ஆர்.ஈஸ்வரன்**,எம்.எல்.ஏ.,(பொதுச் செயலாளர் – கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி)

திரு.**பொன்குமார்** (தலைவர்தமிழ்நாடு விவசாயிகள் தோழமைக்கட்சி - தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத் தலைவர்)

அன்புடன்:
76வது வட்ட திமுக - திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 76**

**ஏற்றம் தந்தவர் - மாற்றம் கண்டவர்**

நாள்: 30.12.2023 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: ஜெயின்பள்ளி வளாகம், அகரம்

தலைமை: கே.சந்துரு (தலைமை செயற்குழு உறுப்பினர்)

புகழுரைப்போர்:
திருமிகு. **கனிமொழி கருணாநிதி**, எம்.பி.,
கழக துணைப் பொதுச் செயலாளர்
பத்திரிக்கையாளர் **பிரியன்**
இயக்குனர். வி.**சி. குகநாதன்**
கவிஞர். **யுகபாரதி**

அன்புடன்:
68வது வட்ட திமுக - கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 77**

**தனித்துவத் தலைவர் - தமிழாண்ட கலைஞர்**

நாள்: 03.01.2024 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: மலையாளி கிளப், கிளப்ரோடு, சேத்துப்பட்டு

தலைமை: V.சுதாகர் (எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர்

புகழுரைப்போர்:
மேனாள்.**நீதியரசர்.கே.சந்துரு**
திருமதி. **உ.வாசுகி**
திரு.**கம்பம் செல்வேந்திரன்**
திரு. **ஓ.ஏ. நாகலிங்க**ம்

அன்புடன்:
58, 58அ வட்ட திமுக - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 78**

**உலகத் தமிழர்களின் இதயம்**
**ஒளிதந்த கலைஞரே உதயம்**

நாள்: 06.01.2024 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: B.K.N. மகால், அனிதா பள்ளி வளாகம்

தலைமை: D.லோகேஷ் ( மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)

முத்தமிழறிரை போற்றும் அயலக வாழ் தமிழ்த்தலைவர்கள்

திரு.**டத்தோ ஸ்ரீ எம்.சரவணன்**
மலேசிய பாராளுமன்ற உறுப்பினர்
ம.இ.கா.தேசியத் துணைத்தலைவர்

முனைவர்.**அருள்ராசா நாகேஸ்வரன்**
எழுத்தாளர் பேச்சாளர்
சுவிஸ் தமிழ் இலக்கிய நிறுவனர்

அன்புடன்:
மாவட்ட இளைஞரணி - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 79**

**இலக்கிய வானில் ஒளிதந்தவர்**
**இலட்சிய பயண வழிதந்தவர்**

நாள்: 07.01.2024 , ஞாயிற்றுக்கிழமை, மாலை: 4.00 மணி , இடம்: இளங்கோ நகர், விளையாட்டு மைதானம், பாடி.

தலைமை: - L.P.F.மோகன் ( மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்)

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையற்தொகையுடன் கூடிய சீருடைகள் வழங்குபவர்

அமைச்சர் .**கே.என்.நேரு** (நகராட்சி நிர்வாகத்துறை)

அன்புடன்:
89வது வட்டம் - அம்பத்தூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 80**

**திசையெங்கும் அவர்சொல் ஒளியானது**
**திராவிட மாடலின் வழியானது**

நாள்: 10.01.2024 , புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில், வில்லிவாக்கம்

தலைமை: வானவில் விஜய் (மாவட்ட மாணவரணி அமைப்பாளர்)

போற்றுவோர்: திரு.**எஸ்.திருநாவுக்கரசு**
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்
திரு.**அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

அன்புடன்: மாவட்ட மாணவரணி
வில்லிவாக்கம் மேற்கு பகுதி

சென்னை கிழக்கு மாவட்டம்
பங்கேற்று சிறப்பிப்பவர்கள்..

டி .ஆர்.பாலு .எம்.பி., (கழக பொருளாளர், நாடாளு மன்ற குழுத்தலைவர்), தயாநிதி மாறன் .எம்.பி., (கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்), மேயர் பிரியா ராஜன்,(தலைமை செயற்குழு உறுப்பினர்) டாக்டர். கலாநிதி வீராசாமி. எம்.பி,(கழக மருத்துவ அணி இணைச் செயலாளர்), இரா.கிரிராஜன் எம்பி., (கழக சட்டத்துறை செயலாளர்), ப. தாயகம் கவி. எம். எல்.ஏ, (கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்), ஜோசப் சாமுவேல். எம்.எல்.ஏ, (அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர்), இ.பரந்தாமன் எம்.எல். ஏ, (கழக சட்டத்துறை இணைச் செயலாளர்), அ.வெற்றி அழகன். எம்.எல்.ஏ. (கழக பொறியாளர் அணி இணைச் செயலா ளர்,) ப. ரங்கநாதன், (தலைமை செயற்குழு உறுப்பினர்

பி.கே .மூர்த்தி. எம்.சி, (தலைமை செயற்குழு உறுப்பினர். மண்டல குழுதலைவர்) கே.சந்துரு, (தலைமை செயற்குகுழு உறுப்பினர்) , கே.எஸ்.எம். நாதன். (தலைமை செயற்குழு உறுப்பினர்), எம். விஜயகுமார், (தலைமை செயற்குழு உறுப்பினர்) , கே .எஸ்.ரவிச்சந்திரன், (கழக சட்டத்துறை துணைச் செயலாளர்), எஸ். மணி முடி, (மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர்), சங்கரி நாராயணன், (கழக மகளிர் அணி துணைச் செயலாளர்), தமிழன் பிரசன்னா, (கழக செய்தித்தொடர்பு இணைச் செய லாளர்), சரிதா மகேஷ்குமார், (பொதுக்குழு உறுப்பினர், மண்டலகுழுத்தலைவர்),

ப.ஸ்ரீராமுலு, (மண்டலகுழுத்தலைவர், (பகுதி பொரு ளாளர்), கூ.பீ. ஜெயின்.எம்.சி, (மண்டலக்குழு தலைவர், பகுதிச் செயலாளர்), ஜி.சாந்தகுமாரி, எம் சி, தலைவர், பொது சுகாதாரத்துறை / மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர்) சொ.வேலு. எம்.சி, (பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர்), ஆ.தாமோதரன், (தலைமை கழக வழக்கறிஞர்). வே .உமாகாந்த், (கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர்), என்.பி.எம் .ஷேக் அப்துல்லா, (கழக சிறுபான்மை அணி துணைச் செயலாளர் ), பரிதி இளம்சுருதி, எம்.சி., (கழக அயலக அணி துணைச் செயலாளர்), கவிஞர் நன்மாறன், (கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர்),

கோ. ஏகப்பன், மாவட்ட அவைத்தலைவர்,
தேவ ஜவகர், மாவட் துணைச் செயலாளர்,
ஜி .மகாதேவன், மாவட் துணைச் செயலாளர்,
புனிதவதி எத்திராசன் .எம். சி. மாவட்ட துணைச் செயலாளர், இசட்.ஆசாத். எம் .சி.. மாவட்ட பொருளாளர்

**பகுதி செயலாளர்கள்**.. ஐ.சி.எஃப். வ. முரளிதரன், ஏ. நாகராசன்.எம் சி., டி.எஸ்.பி.ராஜகோபால்.எம்.சி., எம் .டி .ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, எஸ். ராஜசேகர், எஸ் .முரளி, வே . வாசு, வி.சுதாகர்.

**பொதுக்குழு உறுப்பினர்கள்**.. எஸ். பன்னீர்செல்வம், கோ. மணி, டி.வி. செம்மொழி, பி.ஜே. துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், பி. உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன்,எம்.சி., எம் இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர். ஏ .பி. பூர்ணிமா. எம். சி. இரா. கலைச்செல்வி, டி .போஸ்.

**மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள்**.. டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பி.ஜெகதீஷ், எஸ். தனசேகர், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், சுதா தீனதயாளன்,எம்.சி., நா. துலுக்காணம், ஜி.தாமோதரன், எம்.பெரோஸ்கான், LPF. மோகன், பி.விஜயகுமார், M.விநாயகம், ராஜேஸ்வரி ஸ்ரீதர்,எம்.சி., ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் எம்.சி., ஆர். எஸ்.சித்திக், கு.கிருஷ்மூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், ஜி.பி.பிரதீப்குமார், ம. அசோக்குமார்,

**மாமன்ற உறுப்பினர்கள்**.. கே. சாரதா, டி .யோக பிரியா, எம் .தாவுத்பீ, பி.அமுதா, சி .ஸ்ரீ தணி, லதா வாசு,

எஸ். தனலட்சுமி, ஆ.பிரியதர்ஷினி, மோ.பானு பிரியா, உஷா நாகராஜ், கே.பொற்கொடி, எஸ். உமா, பாத்திமா அகமது, பி சுமதி. மு. சரவணன், ச. அம்பேத்வளவன். எல். ரமணி. ச.தமிழ்ச்செல்வி, எல் நவீன், வி.பரிமளம், ராஜேஷ் ஜெயின், ம.கமல், எம்.இ.சேகர்,

**வட்ட கழக செயலாளர்கள்**: எழும்பூர் வடக்கு 77 தி. தயாளன், 77அ வி.அபாய், 78 சு. மனோகர், 78அ ந. பாலு, 104 - ஆர்.எம்.ரங்நாதன், 104அ - சி. சேகர்

**எழும்பூர் தெற்கு**

58 வி. விஜயகுமார், 58அ ஆர்.பாபு, 61 டால்பின். எஸ்.அரிகிருஷ்ணன். 61அ இ.மொய்தின், 108 வான்மதி கதிரவன், 108அ எல். சுந்தரராஜன்,எம்.சி.

**திரு.வி.க.நகர் வடக்கு**

71 பரிமளா சுரேஷ்பாபு, 71அ மா.ருத்ரமூர்த்தி, 72 எம்.ஏ.டிக்கா. 72அ எம்.இசட்.அபாய், 74 எஸ். புஷ்பராஜ், 74அ ஜி. கிருஷ்ணகுமார்

**திரு.வி.க.நகர் தெற்கு**

73 எம்.தமிழ், 73அ -பொல்லு.டி. சுரேஷ்குமார் , 75 வி.க.வெங்கடேசன், 76 எஸ். சசிகுமார், 76அ எஸ். வெங்கடேசன்

**கொளத்தூர் கிழக்கு**

66அ பி.உமைதுரை, 67 பி.பொன்முடி, 67அ கே. ஜார்ஜ்குமார், 68 கே.பி.ஆதவன்மணி, 68அ பி.டி.சி. எஸ்.ரவி, 70 ப. அன்பரசு, 70அ டி.சந்திரசேகர்

**கொளத்தூர் மேற்கு**

64 செ. முருகன், 64அ எம்.பி.தமிழ்செல்வன், 65 என்.சௌந்தர், 65அ என்.பவுல்ராஜ், 66 என். இராமச்சந்திரன், 69 எம்.ஜெ.சி.பாபு, 69அ பி.அதிபதி

**துறைமுகம் கிழக்கு**

55 வி.சத்தியநாராயணன், 55அ எஸ். புகழேந்தி, 55ஆ ஆர்.எ.அஸ்லாம், 56 டி. கதிரவன் (எ) ராஜா, 56அ பரத்குமார், 60 கே.கவியரசு, 60அ -ஆ.நா. பார்த்திபன்

**துறைமுகம் மேற்கு**

54 எம். ஜெய்சங்கர், 54அ -பா. கதிரவன், 54ஆ ஆர். ரவிச்சந்திரன், 57 ஜி.இராமமூர்த்தி, 57அ பா. அண்ணா துரை, 59 டி.சதிஷ்குமார், 59அ அ.வே.பா.பிரபாகரன்

**அம்பத்தூர் கிழக்கு**

82 மு.சண்முகம், 82அ ஆ. சுந்தராஜ், 83 சீ. லோக நாதன், 83அ சு.மோகன்குமார், 84 மு. விஜயகு மார், 84அ த.வ.லால்.பி செந்தில்

**அம்பத்தூர் தெற்கு :**

87 த. பிரகாஷ்தயாளன், 88 சி. சீனிவாசன், 89 எம்.இ.சேகர், எம்.சி., 90 நா.நொப்போலியன், 93 இரா. டீக்கா

**அம்பத்தூர் வடக்கு**

79 வே.ரவீந்திரன், 79அ பு.வீரா (எ) வீரராகவன்,
80 வெ. இராதாகிருஷ்ணன், 81 மு. இரகு, 85 த. கண்ணபிரான், 86 ம. கமல்,எம்.சி.,

**வில்லிவாக்கம் கிழக்கு**

96 எ.வேதா, 97 சீ.விக்னேஷ் , 97அ ச.மனோகரன், 98 கே. பாஸ்கர், 98அ எ.தேவராஜ், 98ஆ காஞ்சி செ. துரை

**வில்லிவாக்கம் மேற்கு**

94 சிட்கோ சேகர், 94அ ஆர்.தீனதயாளன், 94ஆ க. சுகுமாரன், 95 மா. அகிலன், 95அ உமாசங்கர், 104 சொ.முருகேசன், 104அ ப.லோகுபாபு 104ஆ ஜெ. தங்கராஜ்

அனைத்து நிகழ்ச்சிகளிலும் அந்தந்த பகுதிக்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழகச் செயலாளர்கள்,

மாவட்ட பிரதிநிதிகள். பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள்.

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.
(இந்து சமய அறநிலையத்துறை மற்றும்
சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் துறை)

# மிக மிகச் சாதாரணமானவர்கள் சேர்ந்து உருவாக்கிய இயக்கம் இது!

## முதல்வர் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

“உன் ஊரில் கரிக்கட்டை இருக்கும் அல்லவா... அதை வைத்து ‘உதயசூரியன்’ சின்னத்தை வரை... அதுதான் சிறந்த இயக்கப் பணி!” என்று சொன்னார்.

மிக மிகச் சாதாரணமானவர்கள் சேர்ந்து உருவாக்கிய இயக்கம் இது. இங்கு எல்லோருக்கும் வசதி வாய்ப்பு இல்லை... ஆனால் தி.மு.க.வில் எல்லோருக்கும் அறிவார்ந்த கொள்கை இருக்கிறது! அந்தக் கொள்கையை அடைய வேண்டும் என்று இலட்சியம் இருக்கிறது! அதுதான் நம்முடைய பலம்!

அதைத்தான் பேரறிஞர் அண்ணா அந்தத் தொண்டருக்குப் புரிய வைத்தார்!

ஒரு சாதாரண கரிக்கட்டையைக் கூட கருத்தியல் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன் தி.மு.க.காரன்! அதனால்தான், சமூக வலைத்தளங்களை வெறும் பொழுதுபோக்கு அம்சமாகப் பார்க்காமல், சமூகத்தை முன்னேற்றுவதற்கான திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். பெரிய பெரிய மாநாடெல்லாம் நடத்த வேண்டும் என்று இல்லை; நம்முடைய கருத்துகளை – கொள்கைகளை இன்னொருவரிடம் பேசுவதே, மிகப்பெரிய பரப்புரைதான்.

**அவதூறு பரப்பும் கூட்டத்தை அம்பலப்படுத்துவோம்!**

ஃபேஸ்புக் – யூடியூப் – வாட்ஸ்அப் – ட்விட்டர் – இன்ஸ்டாகிராம் – ஷேர்சாட் – டெலிகிராம் என்று நிறைய வசதிகள் வந்துவிட்டது. இவை எல்லாவற்றையும் நம் கொள்கைகளைக் கொண்டு செல்ல – கட்சியை வளர்க்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! நம்முடைய சாதனைகளைச் சொல்ல வேண்டும்! மக்களை திசைதிருப்ப – ஏமாற்ற அவதூறு பரப்பும் கூட்டத்தை அம்பலப்படுத்த வேண்டும்! இதையெல்லாம் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். இதைக் கவனத்தில் வைத்துச் செயல்படுங்கள்.

அவ்வாறு செயல்படும் ஐ.டி. விங்–ஐ சேர்ந்தவர்களுக்கும் – தங்களின் அடையாளத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் கட்சிக்காக உழைக்கும் பலருக்கும் நன்றி!

**உங்களோடு நெருக்கமாக இருக்கப் பயன்படும் சமூக வலை தளங்கள்!**

உங்களின் பெரும்பாலான ‘ட்வீட்ஸ்–ஐ’.. மன்னிக்க வேண்டும், ட்விட்டர் இப்போது, ‘எக்ஸ்’ ஆகிவிட்டது அல்லவா... உங்களின் பெரும்பாலான ‘எக்ஸ்’ பதிவுகள் என்னுடைய கவனத்திற்கு வந்துவிடும். சிலரின் பதிவுகளை ரசித்துப் படிப்பேன். அதேசமயம், ஏதாவது குறையோ – புகாரோ சொன்னீர்கள் என்றால், உடனே அதைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகிறேன். அந்த வகையில், உங்களோடு நெருக்கமாக இருப்பதற்கான வாய்ப்பாகத்தான் சமூக வலைதளங்களை நான் பார்க்கிறேன். இதையேதான் உங்களிடமும் நான் எதிர்பார்க்கிறேன்.

சக மனிதர்களிடம் நெருக்கமாக சமூக வலைத்தளங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களிடம் நம்முடைய கொள்கைகளை – சாதனைகளைச் சொல்லுங்கள். ஒரே வட்டத்திற்குள் நாம் சுருங்கிடாமல், வெவ்வேறு தளங்களை நாம் ‘ரீச்’–ஆக சமூக வலைதளங்கள் பயன்படுகின்றன.

அதனால்தான், நான்கூட இப்போது ‘ஸ்பீக்கிங் ஃபார் இந்தியா’ என்ற பாட்காஸ்ட் சீரிஸ்–ஐத் தொடங்கியிருக்கிறேன். ஏற்கனவே இரண்டு எபிஸோட் வந்துவிட்டது, விரைவாகவே அடுத்ததும் வரும். இந்தப் பாட்காஸ்ட் சீரிஸ், தமிழ்நாட்டைத் தாண்டி நம்முடைய கருத்துகளை, தெலுங்கு – மலையாளம் – கன்னடம் – இந்தி என்று வெவ்வேறு மொழிகளில் கொண்டு செல்கிறோம்.

**தேர்தல் பிரச்சாரம் – சேர்ந்து முன்னெடுப்போம்! வெற்றி பெறுவோம்!**

“என்னடா இது, இவர்கள் தமிழ்நாட்டில் முடங்கிக் கிடப்பார்கள் என்று பார்த்தால், இந்தி பேசும் மாநிலங்களுக்கும் வந்துவிட்டார்கள்” என்று புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

பார்லிமெண்ட் எலக்‌ஷனுக்கான என்னுடைய பிரச்சாரத்தை நான் தொடங்கிவிட்டேன்; நாம் சேர்ந்து முன்னெடுப்போம்! வெற்றி பெறுவோம்!

இந்திய அரசியலில் எல்லாவற்றுக்கும் முன்னோடியாக இருக்கும் நாம்தான், இந்த மாதிரி ‘பாட்காஸ்ட்’ பிரச்சாரத்திலும் முன்னோடியாக இருக்கிறோம். இவ்வாறு எல்லாவற்றிலும் நாம் அப்டேட்டாகவும் இருக்க வேண்டும்; அட்வான்ஸாகவும் இருக்க வேண்டும்! அதனால்தான், இப்போது நம்முடைய கருத்துகள் மற்ற மொழி ஊடகங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்தியாவுக்காகப் பேசுவோம் – எபிஸோட் 1 மற்றும் 2, இதுவரை பல லட்சம் பேரால் கேட்கப்பட்டுள்ளது.

இதெல்லாம் பத்து, பதினைந்து மாநாடு நடத்தியதற்குச் சமம்.

**கொள்கைகள், சாதனைகளை எடுத்துச் சொல்வோம்!**

மாநாடு என்றால் நம்முடைய ஆட்கள்தான் பெரும்பாலும் வருவார்கள். ஆனால், நம்மை எதிர்ப்பவர்கள் கூட, இதைக் கேட்கிறார்கள். இதன் மூலமாக வீண் வெறுப்பிலும் – பொய்களை நம்பி அறியாமையிலும் இருக்கும் அவர்கள், உண்மைகளைப் புரிந்துகொண்டு மனம் மாறுவார்கள். நம்முடைய கொள்கைகளையும் – சாதனைகளையும் சொல்வதற்கு மட்டுமே நாம் சமூக வலைதளங்களை பயன்படுத்துவோம்.

அ.தி.மு.க.வும் – பா.ஜ.க.வும் பொய்ச் செய்திகளையும் அவதூறுகளையும் பரப்புவதற்காகவே சம்பளம் கொடுத்து வேலைக்கும் – கூலிக்குத் தனியாகவும் ஆட்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் என்றைக்காவது கொள்கையைப் பேசிப் பார்த்து இருக்கிறீர்களா?

> *கள்ளக்கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரப்பும் பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. ஆனால், நம்முடைய கொள்கைகளுக்கு வலிமை அதிகம்! அதனால் தான், 75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இளமை மாறாமல் இருக்கிறது. மக்களும், ஆறு முறை தமிழ்நாட்டை ஆளும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.*

**அ.தி.மு.க.விற்கு கொள்கை என்ற ஒன்றே கிடையாது!**

சமூகத்தில் ஏற்றத்தாழ்வை ஆதரித்து – வெறுப்பை விதைக்கும் பா.ஜ.க.வால் அதன் கொள்கையை தமிழ்நாட்டில் பேச முடியாது. அ.தி.மு.க.விற்குக் கொள்கை என்ற ஒன்றே கிடையாது. எந்தப் பிரச்சினைகளிலும் கொள்கை சார்ந்த நிலைப்பாடு கிடையாது. அதனால், அவர்கள் நாள்தோறும் நம்மைப் பற்றி அவதூறு பரப்புவார்கள். அதற்கெல்லாம் யாரும் முக்கியத்துவம் தராதீர்கள்.

மக்கள் தங்களை அடையாளம் கண்டுபிடித்துவிட்டார்கள் என்று உணர்ந்துவிட்டாலே கூலிகளுக்குப் பதற்றம் வந்துவிடும். என்னதான் கத்தினாலும், சீண்டினாலும் தி.மு.க.காரர்கள் நம்மை கவனிக்கவில்லையே என்று அடிமைக் கும்பலுக்கு விரக்தி வந்துவிடும்.

இப்போதுகூட, பேரறிஞர் அண்ணா மன்னிப்பு கேட்டார் என்று ஒரு செய்தியைப் பரப்பினார்கள், அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று இந்து ஆங்கில நாளிதழே மறுத்துவிட்டது.

அடுத்து, மருதமலை கோயிலுக்கு, தி.மு.க. ஆட்சி மின் இணைப்பு தரவில்லை என்று பரப்பினார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு 5 வருடத்திற்கு முன்பே மருதமலை கோயிலில் மின் இணைப்பு வந்துவிட்டது என்று கல்வெட்டு ஆதாரம் காட்டி இருக்கிறார்கள்.

பா.ஜ.க.விற்குப் பொய் சொல்வது எந்த அளவிற்கு பழக்கம் ஆகிவிட்டது என்றால், பிரதமர் தொடங்கி ஒன்றிய அமைச்சர்கள் பலரும் பொய்களை உண்மை என்று நினைத்து நாடாளுமன்றத்திலேயே பேசுகிறார்கள். இவ்வாறு அவர்கள் பொய்களைப் பரப்பிக்கொண்டே இருப்பார்கள். நாம் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டு இருக்க முடியுமா? நமக்கு ஆக்கப்பூர்வமான வேலைகள் நிறைய இருக்கின்றன. எதிர்காலத்தில் தமிழ்நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் நாம் எதிர்த்தும் போராடியாக வேண்டும். எவ்வாறு, நீட் தேர்வின் அபாயத்தை முன்பே உணர்ந்து, நாம் போராட ஆரம்பித்தோமோ, அவ்வாறு நிறைய வேலைகள் நமக்கு இருக்கிறது.

கள்ளக்கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரப்பும் பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. ஆனால், நம்முடைய கொள்கைகளுக்கு வலிமை அதிகம்! அதனால்தான், 75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இளமை மாறாமல் இருக்கிறது. மக்களும், ஆறு முறை தமிழ்நாட்டை ஆளும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

**பா.ஜ.க.வின் பொய் முகத்திரையைக் கிழிக்கப்போம்!**

அடுத்து, நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகிறது. ‘நாற்பதும் நமதே! நாடும் நமதே!’ என்று நம்முடைய முழக்கத்தைச் சொல்லி வருகிறோம். தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. இந்தியா முழுவதும் நம்முடைய ’இந்தியா கூட்டணி’தான் வெற்றி பெற வேண்டும். அதற்கு பா.ஜ.க.வின் பொய் முகத்திரையைக் கிழிக்க வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக, கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றாமல், பா.ஜ.க. பம்மாத்து செய்துகொண்டு இருக்கிறது என்பதை அம்பலப்படுத்த வேண்டும்.

‘டைவர்ஷன் பாலிட்டிக்ஸ்’தான் அவர்களின் ஆயுதம். உண்மையான பிரச்சினைகளைப் பற்றி எப்போதுமே பேச மாட்டார்கள். பிரச்சினையே இல்லாத ஒன்றைப் பற்றி, திரும்பத் திரும்பப் பேசிப் பிரச்சினையாக ஆக்குவார்கள். அதற்கு சில ஊடகங்களும் துணை செல்லும். இதைக் கரெக்ட்டாகப் புரிந்து கொண்டாலே போதும்!

‘சந்திராயன் விட்டோம். ஜி–20 மாநாடு நடத்தினோம்’ என்று பிரதமர் நரேந்திர மோடி படம் காட்டிக்கொண்டு இருக்கிறார். அவர் இதற்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் என்ன ஆயின என்று நினைவூட்டி, அந்த வீடியோக்களை அதிகம் பரப்புங்கள்.

‘ஆட்சிக்கு வந்தால் கருப்புப் பணத்தை மீட்டு, ரூபாய் 15 லட்சம் கொடுப்போம்’ என்று பிரதமர் மோடி சொன்னதையும் – அதெல்லாம் உங்களை ஏமாற்றுவதற்காக சொன்ன ‘ஜூம்லா’ என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா சொன்னதையும் அதிகமாகப் பரப்புங்கள்.

**மணிப்பூருக்கு பிரதமர் ஒருமுறை யேனும் சென்றாரா?**

“இந்திய மகள்களுக்காக இப்போது உருகுகிற மாதிரி நடிக்கும் பிரதமர் அவர்களே! மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டபோது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? மணிப்பூருக்குப் போய் பாதிக்கப்பட்டவர்களைப் பாத்தீர்களா?” என்று கேள்வி எழுப்புங்கள். “மல்யுத்த வீராங்கனைகள் பா.ஜ.க. எம்.பி. மேல் சொன்ன பாலியல் புகார், பல மாத காலமாகப் பிரதமர் காதில் விழாமல் போனது ஏன்?” என்று கேள்வி எழுப்புங்கள்.

**நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!**

பா.ஜ.க.வின் கடந்த காலத் தவறுகளை சமூக வலைதளங்களில் திரும்பத் திரும்ப நினைவூட்டி பிரச்சாரம் செய்யுங்கள். இதைச் சரியாக செய்தாலே, நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!

இந்த ’செப்டம்பர் – திராவிட மாதம்’, தலைவர் கலைஞரின் நூற்றாண்டில் வந்திருக்கிறது. கலைஞரின் உடன்பிறப்புகளாக, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து, இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம். அடுத்த ’செப்டம்பர் – திராவிட மாத’த்தை, ‘வெற்றி விழாக் கொண்டாட்ட மாத’மாகக் கொண்டாடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து

# மாவட்ட, மாநகரச் செயலாளர்/பொறுப்பாளர் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கவனத்திற்கு...

## தலைமைக் கழக அறிவிப்பு

1-1-2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர,04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 27-10-2023 |
| 2. | பெயர்களைச் சேர்க்க/நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் | 27-10-2023 முதல் 09-12-2023 வரை |
| 3. | சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் | 04, 05-11-2023 18, 19-11-2023 |
| 4. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 01-01-2024 |

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தப் பணி குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை தலைமைக் கழகத்துக்கு அவ்வப்போது கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018,
நாள்: 30-09-2023.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட பெரம்பூர், காமராஜ் நகரில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், மக்கள் மருத்துவ சேவை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் (பொ) சங்களால் குமாவத், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) தா. இளையஅருணா, நிலைக்குழுத் தலைவர் (வரி விதிப்பு (ம) நிதி) திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன். துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), தண்டையார்பேட்டை மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் அவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


கலைஞர் 100 1924 - 2023
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க
விளையாட்டு மேம்பாட்டு அணி
சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா
முன்னிட்டு
முதல்வர் கோப்பை
மாவட்ட அளவிலான
மாபெரும் வில்வித்தை போட்டி
நாள் : 01-10-2023 ஞாயிறு காலை 6.00 - மாலை 5.00 மணி வரை
இடம் : தூய கொலம்பா பள்ளி, செங்கல்பட்டு பழைய பஸ் நிலையம் அருகில்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்
தினேஷ் கந்தசாமி தலைமையில் நடைபெறும்
போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி வருகைதரும்
திருமிகு. டி.ஆர்.பாலு MP
கழகப் பொருளாளர் / கழக நாடாளுமன்றக்குழு தலைவர்
மாண்புமிகு. தா.மோ.அன்பரசன்
குறு-சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. தயாநிதி மாறன் MP
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
ஆகியோரை வருக வருக வருக என வரவேற்கும்
ச.நரேந்திரன் செங்கல்பட்டு நகர செயலாளர்
முதல்வர் கோப்பைக்கான
பரிசுத்தொகை ரூ. 1,45,000
அழைப்பின் மகிழ்வில் அன்புடன்
டி.ஆர்.சாரதி பெரியநாயகம்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர்
JAGAN ADS - 9962969675
சி.ரஞ்சித் என்.என்.கதிரவன் த.பிரேம்பாலாஜி ம.ரேவதி க.செந்தில்குமார் கா.விக்னேஷ் சுகுணாகலைவாணன்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க விளையாட்டு மேம்பாட்டு அணி


என்றென்றும் கலைஞர் 100 1924 - 2023
தி.மு.க கழக மாநில ஆதி திராவிட நலக்குழு மற்றும்
சிறுபான்மை நல உரிமைக்குழு பிரிவு
மத்திய மண்டலம் சார்பாக
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
மாபெரும் பட்டி மன்றம்
நாள் : 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 1.00 இடம் : கலைஞர் அறிவாலயம், விழுப்புரம்
பட்டி மன்ற தலைப்பு
ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை பெற்றுதந்தது டாக்டர் கலைஞரின்
அரசியல் பணியா! கலை இலக்கிய பணியா!
பட்டி மன்ற நடுவர் கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர்
அரசியல் பணியே கவிஞர் இனியன் திருமதி நாகநந்தினி
கலை இலக்கிய பணியே பேராசிரியர் விஜயக்குமார் கடலூர் தணிகைவேலன்
சிறப்பு விருந்தினர்
முனைவர் மாண்புமிகு க.பொன்முடி M.A.,Phd.,B.L.,
உயர்கல்வி துறை அமைச்சர், கழக துணை பொதுச்செயலாளர்
அந்தியூர் செல்வராஜ் M.P., முன்னாள் அமைச்சர், கழக துணைப்பொதுச்செயலாளர்,
M.R.K.பன்னீர்செல்வம் மாண்புமிகு மேலாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்.
எ.வ.வேலு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
செஞ்சி K.S.மஸ்தான் மாண்புமிகு சிறுபான்மை நலன் (ம) வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்.
கயல்விழி செல்வராஜ் M.A.B.Ed., மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
C.V.கணேசன் M.A.B.Ed.B.L., மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மா.மதிவேந்தன் MBBS.,MD மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
முனைவர் T.R.B.ராஜா மாண்புமிகு தொழில்துறை அமைச்சர், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
ர.சுபேதார்கான் மாநில தலைவர், சிறுபான்மை நல உரிமைக்குழு
தலைமை : ஆ.கிருஷ்ணசாமி M.A.,B.L.,MLA
ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர்
முன்னிலை : நா.புகழேந்தி MLA
விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர்
விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
பட்டி மன்றத்தை துவக்கி வைப்பவர்
டாக்டர் பொன்.கௌதமசிகாமணி MS(Ortho) MP
மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர்
வரவேற்று மகிழும்
மருதூர் ஏ.இராமலிங்கம் Ex.MLA ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்
வி.பி.இராசன் Ex.MLA ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர்
திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர்
எஸ்.மாரியப்பன்கென்னடி Ex.MLA ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
பி.துரைசாமி Ex.MLA ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
ஊட்டி மு.பொன்தாஸ் ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
சென்னை சி.தசரதன் ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
மு.பரமானந்தம் ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
அரூர் சா.இராஜேந்திரன் ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
அழைத்து மகிழும்
செ.புஷ்பராஜ் B.Sc.,Ex.MLA
மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர்
முன்னாள் மாவட்ட கழக துணை செயலாளர்
விழுப்புரம் தெற்கு மாவட்டம்.
தி.மு.க கழக மாநில ஆதி திராவிட நலக்குழு
& சிறுபான்மை நல உரிமைக்குழு பிரிவு

# கலைஞரும் நானும் 38

“கலைஞர், மனிதராகப் பிறந்த மகாசக்தி கொண்டவர் என்பதாகவே நான் பார்க்கிறேன். அவர் வாய்ப்புக் கொடுத்து செய்த சிலைகள் மட்டுமல்ல, அவரது சிலையை வடித்ததும் வடிப்பதும் நான் பெற்ற பேறு” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் சிற்பி தீனதயாளன்.

■ சிற்பி தீனதயாளன்

## “கண்ணகிக்கு வளையல் போட வேண்டாம்!”





“1968-ஆம் ஆண்டு அண்ணா சாலையில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலை, மயிலாப்பூரில் அமர்ந்த நிலையில் உள்ள திருவள்ளுவர் சிலை, நாகர்கோவிலில் அமைக்கப்பட்ட ஜீவானந்தம் சிலை என என் தாத்தா எஸ்.பி.பிள்ளை அவர்கள் செய்த சிலைகள், கலைஞரிடம் நற்பெயரை ஏற்படுத்தி இருந்தன.

அண்ணா சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிலை தயாரானபோது, அப்போது புளியந்தோப்பில் இருந்த எங்கள் சிற்பக் கலைக்கூடத்துக்கு அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் என தலைவர்கள் வருகை தந்துள்ளனர். அது மிகவும் தத்ரூபமாக இருந்ததால், தாத்தா எஸ்.பி.பிள்ளை மீது கலைஞர் நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தார். அதன் மூலம் பல வாய்ப்புகளை உருவாக்கித் தந்தார் கலைஞர்.

முக்கியமாகச் சொல்ல வேண்டுமெனில் என் தாத்தா பெயர் எஸ்.பக்கிரி பிள்ளை என்பதாகும். “சிற்பிக்கு பக்கிரி என்கிற பெயர் அழகில்லைய்யா... எஸ்.பி.பிள்ளை என வைத்துக்கொள்” என்று தாத்தாவின் பெயரை மாற்றியவர் கலைஞர். இப்படி கலைஞர் குறித்த என் ஆரம்பக் கால நினைவுகள் உள்ளன. அவை எங்களுக்குக் கிடைத்த பெருமை என்பேன்.

### கலைஞரைச் சந்தித்தல்

1982-ஆம் ஆண்டு என் தாத்தா இறந்த பின்னர், சிற்பக் கலையில் எங்கள் குடும்பத்தினர் தொடர்ச்சியாக ஈடுபடவில்லை. நான் ஐ.சி.எஃப் நிறுவனத்தில் கடைநிலை தொழிலாளியாக இருந்தேன். அவ்வப்போது சிலைப் பணிகளில் ஈடுபட்டு வந்தேன்.

கோவையில் தாத்தா காலத்தில் செய்து தந்த அண்ணா சிலை ஒன்று ஜி.டி.நாயுடு நிறுவனம் எதிரில் இருந்தது. அந்தச் சிலை சேதம் அடைந்த நிலையில் அதை மீண்டும் செய்ய, மு.கண்ணப்பன், கோவை மு.ராமநாதன் ஆகியோர் ஆர்.டி.சீத்தாபதியிடம், அந்தக் குடும்பத்தில் யாராவது சிலை செய்யும் தொழிலில் இருக்கிறார்களா என விசாரித்துள்ளனர். அந்தச் சிலைத் திறப்பு நிகழ்ச்சிக்காகச் சென்ற கலைஞர், சிலையை யார் செய்தது என விசாரித்திருக்கிறார். அப்போது என்னைக் குறித்து அறிந்ததுடன், அதை மனதில் வைத்திருந்தவர், 1991 ஆம் ஆண்டில் அறிவாலயத்தில் அண்ணா சிலை அமைக்கும் வாய்ப்பினை எனக்கு வழங்கினார்.

**சிலைகள் எப்படி வர வேண்டும் என்கிற நுணுக்கங்களை அவரைப்போல கவனித்துச் சொல்ல முடியாது.**

அவரைச் சந்திக்கச் சென்றபோது, எனது தாத்தா குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்டவர், என் வேலை போன்றவற்றை அக்கறையுடன் விசாரித்து “இந்த வேலைகளைச் சிறப்பா செய், நல்லா வருவ” என வாழ்த்தினார். அப்போது எங்கள் சிற்பக் கலைக்கூடம் மீஞ்சூரில் இருந்தது. அந்தச் சிலைத் தயாரிப்புப் பணிகளைப் பார்வையிட அங்கு வருவார். சாலைகள் மோசமாக இருக்கும். “இவ்ளோ தூரம் வர முதுகெல்லாம் வலிக்குதுய்யா” என்பார். அறிவாலயத்தில் அண்ணா சிலையை அமைத்த பின்னர், பல வாய்ப்புகளை வழங்கினார்.

கோபாலபுரம் இல்லத்தில் அஞ்சுகம் அம்மா சிலையைத் தாத்தா செய்துள்ளார். அதன் பின்னர் ஐயா முத்துவேலர் சிலையை நான் செய்தேன். அதேபோல திருக்குவளை இல்லத்தில் உள்ள சிலைகளும் நாங்கள் செய்ததுதான்.

### ஒரு நூலளவு கவனிப்பு

சிலைகள் எப்படி வர வேண்டும் என்கிற நுணுக்கங்களை அவரைப்போல கவனித்துச் சொல்ல முடியாது. சிலைத் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் அவரது ஆலோசனை இருக்கும். சமத்துவபுரம் திட்டம் தொடங்கிய பின்னர், அந்தச் சமத்துவ புரங்களில் பெரியார் சிலையை நிறுவினார். அதற்கான முதற்கட்ட களிமண் அச்சு வேலைகளைத் தலைமைச் செயலகத்திலேயே செய்து அவருக்குக் காட்டினோம்.

பெரியாரின் மார்பளவு களிமண் சிலையைப் பார்த்தவர், “கொஞ்சம் களிமண் கொடு” என வாங்கிச் சிலையின் இடது பக்க மூக்கில் ஒட்டவைத்துக் கொஞ்சம் சரி செய்யச் சொன்னார். பெரியாருக்கு வலது பக்க மூக்குக்கும், இடது மூக்குக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கும்யா என்றார். அவருக்கு மட்டுமில்ல, எல்லோருக்கும் அப்படி ஒரு நூலளவு வித்தியாசம் இருக்கும், கவனித்துப் பார் எனச் சிறு விளக்கமும் அளித்தார்.

### கண்ணகியின் வளையல்கள்

மெரினாவில் கண்ணகி சிலை அகற்றப்பட்டபோது, அதேபோன்ற சிலையை அன்பகத்தில் நிறுவத் திட்டமிட்டார். அதற்கான பணிகளை என்னிடம் அளித்திருந்தார். அதற்கான அச்சுகளைத் தயார் செய்த நிலையில், அதை வந்து பார்த்தார். நான் கண்ணகி சிலையின் கைகளில் வளையல்கள் இருப்பதுபோல அமைத்திருந்தேன். அதைப் பார்த்தவர், “எல்லாவற்றையும் இழந்து நீதி கேட்க வருபவள் எப்படிய்யா வளையல் அணிந்திருக்க முடியும்” எனக் கூறி அதை எடுக்கச் சொன்னார். நான் ‘பூம்புகார்’ படத்தில் கண்ணகியாக நடித்த விஜயகுமாரி அவர்களின் படத்தினை வாங்கி அதில் ‘ரெபரன்ஸ்’ எடுத்திருந்தேன், என அவரிடம் தெரிவித்தேன்.

அதேபோல, மன்னனிடம் நீதி கேட்பவள் கைகள் கொஞ்சம் உயர்ந்திருக்க வேண்டும் என்றும் சில திருத்தங்கள் கூறியதுடன், எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே செய்தும் காட்டினார். அடுத்த நாள் உடன்பிறப்பு கடிதத்தில், அவர் சொன்ன திருத்தங்கள் குறித்து எழுதினார். அதற்கு அடுத்த நாள் காலை 5 மணி இருக்கும். சண்முகநாதன் ஐயா போன் செய்தார். “தீனா... தலைவர் பேசணுமாம்” எனச் சொல்ல, அவரிடமிருந்து போனை கலைஞர் வாங்கி, “மீஞ்சூரு... நீ செஞ்சதுதான்யா கரெக்ட்டு” என்றதுடன், கண்ணகி வளையல் அணிந்திருக்க முடியும் எனத் தமிழறிஞர்கள் பலரும் விளக்கம் அளித்ததாகக் கூறியதுடன், நீ வளையல் வை, ஆனா, அந்தக் காலத்தில் இருந்ததுபோலச் செய் எனக் கூறினார். அதையும் உடன்பிறப்பு கடிதத்தில் பதிவு செய்தார்.

இப்படித் தனது எண்ணத்தைப் பொதுவில் பகிர்ந்து கொள்வதும், அங்கிருந்து வரும் எதிர்வினைகளை எடுத்துக் கொள்வதற்கும் எத்தனை தலைவர்கள் தயாராக இருப்பர்? கலைஞர் அந்தப் பண்பில் யாரும் நெருங்க முடியாத இடத்தில் இருப்பவர். அதேபோல சிலை நிறுவும்போது, வளையலை எப்படிய்யா போடுவ, எனச் சந்தேகத்தைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டார்.

### சிலைக்கான சிரத்தைகள்

‘முரசொலி’ அலுவலக வளாகத்தில் மறைந்த தலைவர் மாறன் அவர்களின் சிலையைச் செய்வதற்கும் வாய்ப்பு வழங்கினார். அந்தச் சிலையைச் செய்யும்போது, ஆரம்பப் பணிகளில் இருந்து நிறுவும் நாள் வரை அவ்வளவு கவனம் செலுத்தினார். எத்தனை மணி என்றாலும் ,அதைக் கவனிக்காமல் சென்றதில்லை. அதேபோன்ற ஒரு சிலை டெல்லி பாராளுமன்றத்திலும் நிறுவப்பட்டது. அந்தச் சிலை செய்யும் வாய்ப்பையும் எனக்கே வழங்கினார். அரசு சார்பில் வழங்கப்படும் பணிகள் என்றாலும், அவ்வளவு அக்கறையுடன் அவற்றை வந்து கவனிப்பார். அந்தப் பணிகளுக்காகப் பலமுறை மீஞ்சூர் வந்துள்ளார்.

‘அறிவாலயம்’, ‘அன்பகம்’, ‘முரசொலி வளாகம்’, ‘கோபாலபுரம் இல்லம்’, ‘திருக்குவளை இல்லம்’ என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாய்ப்புகளால் வளர்ந்தேன். அதேபோல, அவரது சிலைகளையும் செய்ய வேண்டிய பாக்கியம் பெற்றவனாக இருக்கிறேன். ஓமந்தூரார் வளாகம், முரசொலி அலுவலகத்தில் எழுதுவதுபோல உள்ள சிலை, மதுரை நூலகம் எனக் கலைஞரைச் சிலையாக எழுப்புகையில் அந்த மகானுடன் நான் உரையாடுகிறேன். அந்த வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும். நான் அவருடனே பயணிக்கிறேன்..!”

...பகிர்வார்கள்

## விஞ்ஞானிகளின் விஞ்ஞானி!

தமிழகத்தில் அமைந்து கிடக்கும் அளவற்ற உயிரியல் வளங்களின் அடிப்படையில், சென்னையில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்துறையும், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து, ஆசிய, பசிபிக் மண்டலத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய செயலரங்கம் ஒன்றை 1996-ஆம் ஆண்டு டிசம்பரில் நடத்தியது.

‘உயிரியல் தொழில்நுட்பத் துறையிலே தகுதி வாய்ந்த பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கிடும் நோக்கத்தோடு பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம்’ என்று அந்தக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அன்றைய கலைஞர் அரசு, இந்தியாவிலேயே மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை சென்னை சிறுசேரியில் அமைத்திட முடிவு செய்தது. இதன்படி இந்தப் பூங்காவை இங்கு அமைப்பதற்காக 20 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தப் பூங்காவுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் 29.07.1998 அன்று அடிக்கல் நாட்டினார்.

ஏறத்தாழ ஆயிரம் பெண்கள், தொழில்முனைவர்களாக உருவாக இந்தப் பூங்கா வழிவகுத்தது. அதனால்தான் கலைஞரை **‘விஞ்ஞானிகளின் விஞ்ஞானி’** என்று பாராட்டினார், சமீபத்தில் மறைந்த வேளாண்மை விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்.

## :.ப்ளாஷ்பேக்



### தந்தைக்கு மகனின் உதவி!

என் தந்தை கோமதிநாயகம் கழகம் தொடங்கப்பட்ட நாள் முதலே தலைவர் கலைஞருடன் நெருக்கமாகப் பழகி வந்தார். இருவருக்கும் இடையில் கடிதப் போக்கு வரத்தும் இருந்து வந்தது. தனது 35 வயதில் என் தந்தை பார்வையை இழந்தார். அதன் பிறகு அவர் சொல்லச் சொல்ல நாங்கள் தலைவர் கலைஞருக்குக் கடிதம் எழுதுவோம். 1996-ஆம் ஆண்டு கோவில்பட்டி காந்தி மைதானத்துக்குப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த தலைவர் கலைஞர் அவர்கள் என் தந்தையை சந்தித்து சால்வை அணிவிக்க வேண்டும் என்பதை அன்றைய மாவட்டச் செயலாளர் என்.பெரியசாமி அவர்களிடம் தெரிவித்துள்ளார். அதன் பெயரில், பொதுக் கூட்டத்தில் வைத்து என் தந்தைக்கு, தலைவர் கலைஞர் சால்வை அணிவித்துப் பாராட்டினார். உடன் ஐயா தமிழ்க்குடிமகன் அவர்களும் இன்றைய கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களும் இருந்தனர். இந்தப் புகைப்படத்தை எடுக்கும் வாய்ப்பு ஒரு புகைப்படக்காரனாக எனக்குக் கிட்டிய பெரும் வாய்ப்பு என்றே கருதுகிறேன்.



ஸ்டாலின் வெங்கடேசன்

**–ஜி.ஸ்டாலின் வெங்கடேசன், கோவில்பட்டி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பிரிவினைவாத தடுப்புச் சட்டம்!

**1963-ஆம் ஆண்டு மே மாதம், தஞ்சை மாவட்டத்துக்கு கழகச் சுற்றுப்பயணம் திட்டமிட்டார் பேரறிஞர் அண்ணா. உடன் கலைஞரையும் அழைத்துச் சென்றார். அந்தச் சுற்றுப் பயணத்தின் போது கும்பகோணத்தில் அண்ணா பேசியதைத் திரித்து, தி.மு.கழகத்தைக் கலைத்து விடுவதாக அண்ணா கூறியதாகச் செய்தி வெளியிட்டன பத்திரிகைகள். அப்போது பிரிவினைவாத தடுப்புச் சட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி இருந்த நேரம் என்பதால், பத்திரிகை செய்திகளைக் கண்டு அண்ணா கடும்கோபம் கொண்டு, ‘‘தி.மு.கழகத்தை நான் மட்டும் நினைத்தால், கலைத்துவிட முடியுமா?’’ எனக் காட்டமாக அறிக்கை வெளியிட்டு, கழகத்தின் ஜனநாயகப் பண்பாட்டினை விளக்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 257




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131